𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ௵ கார்த்திகை ௴ { ஸஞ்சிகை 11

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌦𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

பெருமகனும் ப்ரசாரமும்

பரமக்ருபையினால் ஶ்ரிய:பதி நமக்கு பகுத்தறிவை அனுக்ரஹித்திருக்கிறான். அதற்கேற்ப நாம் நடந்துகொள்வதினால்தான் விலங்குகளைக்காட்டிலும் உயர்ந்தவர்களாகிறோம். ஆனால் உலகப்போக்கை நோக்குமிடத்து சிற்சில ஸமயங்களில் நம்மைவிட அறிவில் சிறிய விலங்குகள் கூட நேர்மையாக நடந்துகொள்கின்றன. அவைகளுக்கென்று வகுத்த வழியையே பின்பற்றுகின்றன. அவைகளிலிருந்து பிறழுவதில்லை. ஆனால் நாமோ, நம் மனம் போன போக்கில் நமது ஸமய ஸந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடக்கவாரம்பிக்கிறோம். அந்தோ! மனிதனுடைய வீழ்ச்சியை என்ன என்று சொல்வது.

பலத்தினால் வாழவேண்டுமென்பது விலங்குகளுக்கு ஏற்பட்ட வழியே தவிர, நமக்கல்ல. நாம் அறிவினால் வாழுகிறோம். ஆகவே நாமும் வாழவேண்டும், நம்மைச் சுற்றிலும் உள்ளோர்களும் வாழவேண்டும். இதுவே சாலச் சிறந்த முறை. உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் வாழவேண்டுமென்பதுதான் நமது முன்னோர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்த வழி. இதுவே அறிவிற்சிறந்த வழி.

ஆசாபாசங்கள் நமது அறிவை மறைக்கின்றன. சில சமயங்களில் அறிவை அழித்தும் விடுகின்றன. ஆகவேதான் ஆசாபாசங்களை ஒழிக்கவேண்டுமென நமது முன்னோர்கள் கூறினார்கள். முன்னோர்கள் தீர்க்கதர்சிகள். வருங்காலத்தை நன்குணர்ந்தவர்கள். ஆனால் தற்காலத்தில் ஆசாபாசங்களே அடிப்படைத் தத்துவங்களாக கருதப்படுவதினால் முன்னோர்கள் அறிவாளிகள் என்றோ, அவர்கள் கூற்றுகளை அப்படியே பின்பற்றவேண்டுமென்றோ நமக்குத் தோன்றுவதில்லை. நவீனர்கள் ஆசாபாசங்கள் இன்றி அமைதியையே நாம் நாடுவதானால் முற்போக்கடைய முடியாது எனக் கூற ஆரம்பித்திருக்கிறார்களல்லவா! ஆனால் உண்மை அப்படி யல்ல, அமைதிக்கேற்ப ஆசாபாசங்களைக் கொள்ளலாம். ஆனால் ஆசாபாசங்களுக்கு நாம் அடிமைகளாகி விடக்கூடாது. இம்மாதிரி மனோநிலை ஏற்படுமாயின் நாம் எல்லோருடனும் சுகித்து வாழ முடியும்.

நமது பேராசை, சுயநலம் இவைகளினால் நாம் நமது ஸமூஹத்தினரையும், சுற்றத்தினரையும் புத்ர மித்ரர்களையும் கூட வெறுக்கவாரம்பித்துவிட்டோம். இம்மாதிரியான ஆசையும் சுயநலமும் எங்கு கொண்டுபோய் விடுமெனக் கூறுவதற்கில்லை. இம்மாதிரியான இழிவான குணங்கள் நமக்கு அமைதியின்மையைக் கொடுப்பதுடன் ஒவ்வொரு தினமும் பற்பல சர்ச்சைகளையும், மனக்கசப்பையுமேற்படுத்திவருகின்றன. தன் வீட்டிலும் சச்சரவு. நாட்டிலும் சச்சரவு. குடும்பத்தில் பாகப்பிரிவினையிலும், நாட்டு அரசியல் வாழ்க்கையிலும் நாளுக்கு நாள் இம்மாதிரியான சச்சரவுகள் மலிந்து வருகின்றன. இவைகளே நவீன நாகரீகங்களானால் இம்மாதிரியான வாழ்க்கையை யுடைய உலகமே சீக்கிரம் அழிவது நல்லது எனக் கூடக் கூறலாம்.

ஒரு புறம் உலகம் முழுவதும் ஒரே ஐக்கிய அரசாங்கமாக வமைய வேண்டுமெனக் கூறுபவர்களுமிருக்கிறார்கள். அதே ஸமயம் நாம் நமது நாட்டைப் பெறவேண்டுமெனக் கூறுப

வர்களும் இருக்கிறார்கள். தங்கள் கருத்துக்களுக்கு ஆதாரம் இவர்கள் காட்டுகிறார்கள். அதாவது மொழி, கலாசாரம் இவைகளைக்காப்பாற்றவேண்டுமாயின் நமது நாடு தனிப்பட்டதாக இருக்கவேண்டுமாம். இது உண்மை தானா? மொழி கலைகள் இவைகளை மற்றைய ஸமூஹத்தினரிடையே காப்பாற்றமுடியாதா? ஒவ்வொருவருக்கும் ஸஹிப்புத் தன்மையும், மற்றவருடைய கருத்துக்களை அறிந்து நடந்து கொள்ளும் எண்ணமுமிருந்தால் எங்கும் எக்காலத்திலும் எம்மாதிரியான பண்பாடுகளையும் காப்பாற்ற முடியும். இதற்கு மிகவுமவசியமானது நமது அறிவும் ஆற்றலும்.

நமக்குள்ள அறிவு மற்றவருக்கும் உண்டு. அவரும் உண்மையாகப் பாடுபடுபவர். அவருடைய கருத்துக்களையும் நாம் கௌரவிக்க வேண்டும் என்றதுபோன்ற ஆழ்ந்த ஜ்ஞாநம் நம்மில் ஒவ்வொருவருக்கும் இருக்குமேயாகில் நாம் எக்கார்யத்தையும் செய்து முடிக்கலாம். பிறர் மனம் நோகாமல் நாம் நடந்துகொண்டு உண்மையைப்புகட்ட நாம் பாடுபடுதலே நமக்கு இருக்கவேண்டிய முக்கிய குணம் என்பதை எந்நாட்டிலும் எக்காலத்திலும் பெரியோர்கள் கூறிவந்தார்கள், கூறியும் வருகிறார்கள். உலகிலுள்ள வேற்றுமைகளை நாம் அகற்றவேண்டுமென எண்ணுவதாக நினைக்கவேண்டும். வேற்றுமைகள் உண்மைதான். அவைகளை அகற்ற முடியாது. ஆனால் வேற்றுமைகளிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதுதான் நமது கொள்கை. நாம் செய்யவேண்டிய கார்யமுமதுவேதான்.

நமது கருத்துக்களைப் பிறருக்கெடுத்துக்கூறலாம். நம்மை அவர்களும் பின்பற்றும்படிச் செய்யலாம். ஆனால் நாம் கையாளும் முறை ஒழுங்குள்ளதாக இருத்தல் வேண்டும். இம்மாதிரியான அமைதியான முறையைப் பின்பற்றுகிறவன்தான் பெருமகன் அல்லது ஸஜ்ஜனன் எனக் கூறப்படுவான். நம்மில் ஒவ்வொருவரும் அம்மாதிரியாகக் கருதப்பட வேண்டுமென ஆசைப்படுவதில் என்ன பிசகு. இம்மாதிரியான ஆசை பேராசையல்ல. நமக்கு இம்மாதிரிப்பெயர் கிடைப்பதுதான் நாம் நமது உலக வாழ்க்கையில் அடையக் கூடிய பேரின்பம். இதற்கு மாறுபட்ட பெயருடன் நாம் வாழ்வது வீணேதான்.

பெருமகன் என்பவன் தனக்குச் சுற்றிலுமுள்ள ஒவ்வொருவனுக்கும் நன்மையையே கருதுகிறான். மனோ வாக்கு காயமென்ற த்ரிகாணங்களினாலும் இவன் மற்றவனுக்கு இன்பத்தையே கொடுபபான். அந்நியனைப்பற்றி பேசுங்கால் உயர்ந்த பண்புடன் பேசுவான். அவனுடைய மனது புண்ணாகும்படி பேச மாட்டான்.

இம்மாதிரியான மனோநிலை உலகில் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுமெனக் கூறமுடியாது. அது ஸாத்யமில்லை. ஆனால் படித்தவர்கள் உலகில் ஸுகதுக்கங்களிலுழன்றவர்கள், நல்ல அநுபவமுள்ளவர்கள் இம்மாதிரியான மனோநிலையை அடைய வேண்டும். இல்லாவிடில் அவர்களுடைய படிப்பு, அநுபவம் முதலியவைகள் வீண்தான்.

ஸமீபகாலத்தில் முற்போக்குக் கொள்கைகள், வாக்குச்சுதந்திரமென்ற பெயர்களால் பலவிதமான அநீதிகள் இழைக்கப்படுவதை நாம் காண்கிறோம். வாக்கு சுதந்திரத்தோடு கூடியதே எழுத்து சுதந்திரம். தங்களுடைய கொள்கைகளை ப்ரகாசப்படுத்துவதற்காக பலவித அரசியல் கட்சிகளும், ஸமூஹவாதிக்கட்சிகளும் நவீனகாலத்துக்கு ப்ரசார ஸாதனமாக தினசரிப் பத்ரிகைகளை ஏற்படுத்திக்கொண்டும், அவைகளின் மூலமாக தங்கள் கொள்கைகளை உலகுக்கு ப்ரசாரப்படுத்துவதுடன் நிற்காமல் மற்றைய கட்சிகளையும் மற்ற ஸமூஹத்தினரின் கொள்கைகளையும் நியாயமற்ற முறையில் கண்டிப்பதும் ஸர்வ ஸாதாரணமாகிவிட்டது. இது மிகவும் வருந்தத் தக்க நிலை. தன்னை ஸ்தோத்ரம்செய்து கொள்வதென்பது ஒருவாறு உணரமுடியும். அதற்காக அன்னியனை இழிவுபடுத்துவதென்பது மிகவும் கேவலமான ஓர் நடத்தையே யாகும். உண்மைகளுக்குப் புறம்பான விஷயங்களையும் கூறி அதன் மூலமாகவே மற்றவர்களைக் கண்டபடி பேசியும் தூஷித்தும் ப்ரசாரப் படுத்துவது ஓர் அநாகரீகத்தின் அடையாளமே யாகும்.

மதிப்புக்குறியவர்களை தூஷிப்பது அறவே ஒழியவேண்டும்.

மேலே கூறியவற்றைக்காட்டிலும் நாம் வருந்தத்தக்கது மற்றொன்றுமுண்டு. நமது மனோநிலை சூழ்நிலையால் பாதிக்கப்படும். 'தீயார் சொற்கேட்பதுவும் தீதே' என்றபடி இம்மாதிரியான துஷ்ப்ரசாரங்களில் ஈடுபடும் தீயசக்திகளிடம் நாம் தொடர்பு கொள்வதே மிகவும் வருந்தக்கூடிய விஷயம். உதாரணமாக நமது ஸமூஹத்தினரை இழிவுபடுத்தும் சொற்பொழிவுகளிலும், தனிப்பட்டவர்களின் கூட்டங்களிலும், ப்ரசார பத்ரிகைகளிலும் நாம் அனாதரவு காட்டவேண்டும். அப்படிக்கின்றி நாம் அவைகளுடன் கூடவே சஞ்சரிப்பது விரும்பத்தக்கதல்ல. இதனால் நமது மனோநிலையும் கெடுவதற்கு ஸந்தர்ப்பம் உண்டு. உத்தம குணம் படைத்தவனும்கூட வெகுநாட்கள் இம்மாதிரி ஸம்பந்தங்களுக்கு ஆதரவு கொடுப்பானாகில் தன்னுடைய பெருந்தன்மையை இழப்பான் என்பதில் ஐயமில்லை.

ஆனால் நம்மில்சிலர் இம்மாதிரி செயல்களில் ஈடுபடுவதும், நாம் கேட்கப்புகின், நம்மைப் பற்றி பிறரின் கருத்துக்களை அறியவேண்டியே இவைகளில் ஈடுபடுவதாகவும் ஸமாதானம் கூறுவர். இதுவும் விரும்பத்தக்கதல்ல. நம்மைப்பற்றி உலகிலுள்ளோர் பலர் கூறுவதை என்னென்று விபரமாக அறிவது இயலாத கார்யமே. ஆதலின் நாம் இம்மாதிரியான கோஷங்களுக்கு செவிசாய்க்காமலும், இம்மாதிரி துஷ்ப்ரசாரங்களில் கண்ணோட்டமில்லாமலுமிருப்பதே சாலச்சிறந்தது.

உலகில் எல்லோரும் நற்குண நற்செய்கைகளுடன் வாழவேண்டுமென்ற பரந்தநோக்குடன் கூடிய மனோநிலை நம்மிலெல்லோருக்கும் வரவேண்டியது மிகவுமவசியம். அப்பொழுது தான் உலகின் உண்மையான முன்னேற்றத்தைக்காணமுடியும்.

ஃ ஃ ஃ ஃ ஃ

சுயநலமும், குறுகிய மனப்பான்மையும் ஸமூஹத்தில் அடிகோலிக்கிடக்கிறது. இதனால் பரிசுத்தத்தைக்கண்டால் பயமும் அதன் காரணமாய் அதனிடம் வெறுப்பும் ஏற்பட்டுள்ளது.

ஸம்ஸ்க்ருதமும் ப்ராஹ்மணீயமும்

ஸம்ஸ்க்ருதத்தின் வாஸனையால் ப்ராஹ்மணீயம் ஸமூஹத்தில் பரவுவதாகவும், மேநாட்டு நாகரீகம் இதற்கு உதவுவதாகவும் சில முன்யோசனை இல்லாதவர்கள் கூறுகிறார்கள். இவர்போன்றவர் ஸம்ஸ்க்ருதமும், அதைமுன்னிட்டு ஓர் ஜாதியின் பழக்கவழக்கங்கள் மற்றைய ஜாதியினரிடையே புகுவதாகக்கூறும் பொழுது மற்றொருசாரார் ஸம்ஸ்க்ருதத்தை ஒரு ஜாதியினரே தன் சொந்த பாஷைபோல் பரிபாலித்து மற்றவர்களிடம் பரவவிடாததால் அந்தமொழி போதிய ஆதரவை ஸமூஹத்தில் பெறவில்லை எனக்கூறுகிறார். இப்படி முறண்பாடான கருத்துக்கள் கூறுபவர்களின் உண்மை நோக்கம்தான் என்ன? ப்ராஹ்மணத்வேஷமும், அவர்கள்ஸம்பந்தப்பட்ட மொழி, பழக்கவழக்கங்கள், பண்பு, கலை எல்லாவற்றிலுமுள்ள த்வேஷமே. எந்த ஜாதியினரையும்கெட்டுப்போகவேண்டும்என ப்ராஹ்மணன் கூறவில்லை. உலகிலெல்லோரும் வாழவேண்டும் என்றுதான் கூறுகிறான். அதற்காகவே நித்யகர்மாக்களையும் செய்கிறான். அப்படியிருக்க ஏன் இந்த தோஷமும், நிந்தனையும். ஒவ்வொருஸமூஹத்திலும் பல உட்பிரிவுகளிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவினரும் பொருளாதாரத்துறையில் முன்னேற வேண்டுமென ஆசைப்படுவது ந்யாயமே. ஆனால் மற்றவர் முன்னேறுவதைத் தடைசெய்ய வேண்டும், நாம் நாட்டில் முன்னேறவேண்டுமென எண்ணுவது நியாயமாகுமா. இப்படித்தான் உலகில் பலர் தன்னறிவு வளர்ச்சியால் முன்னுக்குவரமுடியாமல் அதனால் பொறாமைகொண்டு உயர்ந்த நிலையிலுள்ளவர்களையும் பின்னுக்கிழுக்க முற்படுகிறார்கள். இதுதான் கலியின் கோலாகலம். இந்த அடிப்படைக்காரணத்தினால் வடமொழியிலுள்ள சொற்களையும் ஏற்றுக்கொள்வது சரியல்ல என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்த்து நாம் வருந்தவேண்டியிருக்கிறது.

ப்ராஹ்மணதர்மங்களில் உயர்ந்த உண்மைகளிருப்பதை எல்லோரும் நன்கு உணர்வார்கள். அந்த உண்மைகளை யாரும் பின்பற்றி முன்னுக்கு வரமுடியும். அப்படி உயரவேண்டுமென்பதுதான் நம்முடைய அவாவும். அப்படிக்கின்றி முன்னுக்குச்சென்றவனை பின்னுக்கிழுக்கும் பழக்கம் ஒழியவேண்டும். இதனால் ஒருவன் முன்னுக்கு வரமுடியாது. எல்லோருக்கும் ஓர் நாசத்தைத்தான் உண்டாக்க முயற்சிப்பதாக ஏற்படும்.

ஜாதிப்பிரிவினையை ஒழித்துக்கட்டவேண்டும், சேரிகளை ஒழுக்கவேண்டும், என்றெல்லாம் கூறுவதில் ப்ரயோஜனமில்லை. ஒருநாளும் நடக்கப்போவதுமில்லை.

நாட்டில் பொருளாதாரத்துறையில் முன்னேற்றத்தை உண்டாக்க முயற்சிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால் இது எவ்வளவுதூரம் ஸாத்யமென்று யோசித்துப் பார்க்கவேண்டியது அறிவாளிகளின் பொறுப்பு. பல ஐந்தாண்டு திட்டங்களில்கூட செய்யமுடியாத ஓர் சேரிஒழிப்புத்திட்டத்தை ஒரே நாளில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென ஆசைப்படுவது உலக இயல்புக்கு எதிராக முயற்சிப்பதாகும். ‘பலதுளி பெருவெள்ளம்’ என்பதுபோல் சிறிது சிறிதாக சீர்திருத்தங்கள் செய்யமுயலவேண்டுமே யல்லாது, உடனேயே நினைத்ததையெல்லாம் செய்துமுடிக்க முற்படுவது போகாத ஊருக்கு வழி தேடுவதாகும்.

ஃ ஃ ஃ ஃ ஃ

ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நமது ஸமூஹத்தின் னிஹபரநலனுக்கென்றே ஏற்பட்டது ஸ்ரீமதஹோபிலமடம் - ஸ்ரீ ஸந்நிதி. பல்லாண்டு, பல்லாண்டுகளாக இந்த ஸ்ரீஸந்நிதியை ஸ்தாபித்தும், நிர்வஹித்தும், வந்துள்ள ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத் ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணஸார்வபௌமராகிய ஸ்ரீமதழகியசிங்கர் ஒவ்வொருவருக்கும் நமது ஸமூஹம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

சிஷ்யர்களின் நலனுக்கென்றே ஸ்வஸுகத்தைக்கருதாமலும், கஷ்டநஷ்டங்களைப்பாராமலும், பாடுபட்டுவருகிறார்கள் ஸ்ரீமதழகியசிங்கர்களென்றால் இதைக்காட்டிலும் நாமடையக்கூடிய நன்மைகள்தானென்ன.

தத்காலம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கசேத்யாதிபிருதாலங்க்ருத ஸ்ரீவண்சடகோப, ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் தென்னாற்காடு ஜில்லாவில் பாதூரக்ரஹாரத்தில் வெகு விமரிசையாக நடைபெறப்போகிறது. நாளது கார்த்திகை மீ 3உ ஸ்திரவாரத்தில் பூராட நன்னாளில் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை நாமெல்லோரும் கொண்டாடுவோம்.

இம்மஹான் ‘தொண்டைமண்டல வேதியர் வாழவே’ என்று ஸ்ரீதேசிகனால் புகழப்பட்ட தொண்டைமண்டல வேதியர் ஸம்பந்தத்தையும். ‘சோறுடைத்தது சோழநாடு’ என்ற கம்பன் வாக்குப்படி, பெருஞ்சீமானான சோழநாட்டுமஹானின் ஸம்பந்தத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறார்.

தத்காலசூழ்நிலையில் காணப்படும் ப்ரதேச ஆசைப்படியும் நோக்குமோமானால் கீதோபதேசத்தைச்செய்த கண்ணன்போல் எங்கும் எல்லோருக்கும் உறியவனாக ஸேவை ஸாதிக்கும் பெருமை இம்மஹானுக்கு உண்டு.

ஸ்ரீஸந்நிதியில் பட்டாபிஷேகம் செய்துகொண்டவுடனேயே, சிஷ்யர்களின் நலனைக் கருதி இம்மஹான் ஸ்ரீமாலோலனின் விபவத்துடன் சஞ்சாரமாக எழுந்தருளவாரம்பித்தார். நமக்குத்தெரிந்தவரை ஸ்ரீ ஸந்நிதி சரித்திரத்திலேயே கேட்டிராதபடி கோடிக்

கணக்கான சிஷ்யர்களுக்கு நேரில் ஸேவை ஸாதித்தும், ஸ்ரீமதஹோபிலம் ஆரம்பித்து கன்யாகுமரி வரையுள்ள எல்லாப்ரதேசங்களுக்கும் நேரில் ஸஞ்சாரமாக எழுந்தருளியும் ஓர் மஹா யாத்திரையும் இதுவரை செய்தருளியாயிற்று. இனியும் வடதேசயாத்திரையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றதிருவுள்ளத்துடனெழுந்தருளுகிறார் இம்மஹான். இந்த ஸஞ்சாரமும் பூர்த்தியானவுடன் லோகஸஞ்சாரம் செய்து சிஷ்யோஜ்ஜீவனம் செய்த மஹான்களில் அத்விதியராவார் இம்மஹான்.

இம்மஹான் ஆஸ்தானநிர்வாஹம் செய்வதில் மிகவும் சதுரரென்றெல்லோராலும் கொண்டாடப்படுகிறார். கடுமையான ஸஞ்சாரங்களில்கூட ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தகாலக்ஷேபாதிகள் இடைவிடாது நடந்துவருகின்றன. அத்துடன் ஸ்ரீஸந்நிதி லௌகிக நிர்வாஹங்களும், மிகவும் சிறந்தவகையில் அமைக்கப்பட்டும் வருகிறது. விடியற்காலை நான்கு மணி முதல் இரவு ஒன்பது—பத்து மணிவரை இடைவிடாது கார்யங்களை கவனித்தும், திறமையாக நடைபெறச்செய்தும், ஸ்ரீஸந்நிதி நிர்வாஹத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துகொண்டும் எழுந்தருளியிருக்கிறார் இம மஹான்.

நிற்க நமது ஸமூஹ சீர்கேட்டிற்கெல்லாம் நவீன கல்விமுறையே காரணமென்பதை நன்குணர்ந்த இம்மஹான் நமது ஸமூஹ சிறுவர்களுக்காகவே பல கல்விச்சாலைகளை ஏற்பாடு செய்து மாதாமாதமாயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து வருகிறார்கள். வேதப்ரபந்த பாடசாலைகளை ஆங்காங்கு ஏற்பாடு செய்யவும் உத்ஸாஹமூட்டியும் உதவி புரிந்தும் வருகிறார்கள். ஸமீபகாலத்தில் நவீன பள்ளிக்கூடங்களில்கூட ப்ராசீன நற்பழக்கங்களை ஏற்படுத்தவும் முயற்சித்தும் வருகிறார்கள். இப்படியாக அல்லும், பகலும் சிஷ்யோஜ்ஜீவனத்திற்காகவே பாடுபட்டுவரும் இம்மஹான் ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஆஸ்தானத்தில் ஓர் பெரிய ஆசார்யச்ரேஷ்டராக எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீமாலோலன் அநுக்ரஹித்தருளியிருப்பது சிஷ்யர்களாகிய நம்முடைய பாக்யமே. ஆழ்வார் அநுஸந்தித்ததுபோல பல்லாண்டு பல்லாண்டுகளாக இந்த ஜகதாசார்யர் எழுந்தருளியிருந்து நம்மை அநுக்ரஹித்தருள ஸ்ரீமாலோலன் துணை புரியவேணும் என்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இம்மஹானின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை கார்த்திகை மீ 3 வ (19–11–55) நமது நாட்டில் எல்லாவிடங்களிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்களென நம்புகிறோம்.

—ஃ— —ஃ— —ஃ—

333 வது பக்கச் செய்திகளின் தொடர்ச்சி:—

ஷை ஸ்ரீகல்யாணபிவர்த்திநீஸபையானது (23–9–55) வெள்ளிக்கிழமை புரட்டாசி திருக்கேட்டையன்று மாலை ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைமுன்னிட்டு இக்கலாசாலை ப்ரதான அத்யக்ஷர் ஸ்ரீ. உப. T.ராமஸ்வாமிஅய்யங்கார் (M.A.L.T.) ஸ்வாமியின் தலைமையில் நடைபெற்றது. அத்யக்ஷர் ஸ்வாமி ஸ்ரீமதாசார்யருடைய வைராக்யாதி குணங்களையும் அவர் திருநாமத்தில் அழகாக அமைந்திருக்கும் விசேஷார்த்தங்களையும் நன்கு உபந்யஸித்தார். இம்மாதிரியே அத்யாபகஸ்வாமிகளும் ஸ்ரீஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் வைபவத்தைப்பற்றி உபந்யஸித்தார்கள். அன்று 23–9–55) இரவு இக்கலாசாலைக்கு ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை எழுந்தருளப்பண்ணி விசேஷ தளிகையுடன் மண்டகப்படி உத்ஸவத்தை அத்யாபகஸ்வாமிகளும், வித்யார்த்திகளும், நடத்திவைத்தனர்.

j. சேஷாத்ரி
V. D. ரங்கராஜன்
காரியதரிசிகள்

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(14-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

முன்பு 'கௌமாரகேளி' என்று தொடங்கி 'தாடகாதாடகேய' என்று முடிந்த சூர்ணிகைகளால் நம் ஸ்வாமி பகவான் செய்த விச்வாமித்ர யாக ஸம்ரக்ஷணத்தை விசதமாக ஸாதித்தார். இனி பகவானின் அவதாரந்தோறும் இலக்குமியும் அநுகுணமாக அவதரிக்கிறாளென்று ப்ரமாணம் கூறிகிறபடி அயோநிஜையாக அவதரித்து ஸீதை என்ற திருநாமத்துடன் ஜநகமஹாராஜன் திருமாளிகையில் வஸித்துவரும் திருமகளுக்கும் ஸ்ரீராமபத்ர ரூபியான திருமாலுக்கும் நிகழ்ந்த திருக்கல்யாண மஹோத்ஸவ மூலமான சேர்த்தியை வருணிக்கத் திருவுள்ளம் கொண்டவராய், ரிஷிகள் மூலமாய்ச் சிவ வில்லின் மஹிமையை யறிந்து அதைக் காணக் குதூஹலம் கொண்டு விச்வாமித்ரமுனிவருடன் மிதிலைக்குச் செல்லும் ஸ்ரீராமபத்ரனுடைய பாதாரவிந்த தூளிஸ்பர்சத்தாலே கௌதமபத்நியான அஹல்யா தேவிக்கு ஏற்பட்ட பரிசுத்திவிசேஷத்தை வர்ணிக்கிறார் ஜடகிரணேத்யாதி சூர்ணிகையினால். முற்றும் லகுவான அக்ஷரங்களாலமைந்த இந்த சூர்ணிகை, நம் ஸ்வாமியின் கவி (தார்க்கிக) ஸிம்ஹம் என்ற பிருதை வலியுறுத்துமழகு அநுபவிப்போர்க்கு ஸ்பஷ்டம்.

जडकिरणशकलधरजटिलनटपतिमकुटतटनटनपटुविबुधसरिदतिबहुलमधुगलनललितपद
नलिनरजउपमृदितनिजवृजिनजहदुपलतनुरुचिरपरममुनिवरयुवतिनुत!

ஜடகிரணசகலதரஜடில நடபதிமகுடதட நட நபடுவிபுதஸரிததி பஹுளமதுகள நலளிதபத நளிநரஜ உபம்ருதித நிஜவ்ருஜி நஜஹதுபல தநுருசிரபரமமுநிவரயுவதிநுத!

(ப-ரை) ஜடகிரண—குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனுடைய, சகல—சிறுபாகத்தை, பால சந்திரனை யென்றபடி. தர— தரிக்கின்றவனும், ஜடில— கபர்த்தமென்ற சடை தரித்தவனுமான, நடபதி— நடராஜனான சிவனுடைய, மகுடதட— கிரீடப்ரதேசத்தில், ஜடா மண்டலத்திலென்றபடி. நடந— நர்த்தனம் செய்வதில், படு— திறமையுள்ள, விபுதஸரித்— கங்கா நதியாகிற, அதிபஹுள— மிக்க அதிகமான, மது— தேனின், களந— பெருக்கினால், லளித— அழகு பொருந்திய, பத— திருவடியாகிய, நளிந— தாமரைப்பூவின், ரஜ:— தூளியினால், உபம்ருதித— அழிக்கப்பட்ட, நிஜவ்ருஜிந— தன் பாபவிசேஷத்தை யுடையவளும், ஜஹத்— விடுகின்ற, உபலதநு— கல்ரூபத்தை யுடையவளும், ருசிர— அழகு பொருந்தியவளும், பரமமுநிவரயுவதி— முநிச்ரேஷ்டரான கௌதமரின் சிறந்த மனைவியுமான அஹல்யா தேவியால், நுத— ஸ்தோத்ரம் செய்யப்பட்ட ஸ்ரீராமபத்ர!

(கரு) சிவவில்லைக் காணக் குதூஹலம் கொண்ட ஸ்ரீராமபத்ரனை விச்வாமித்ரமுனிவர் மிதிலைக்கு அழைத்துச் செல்கிறார். வழியில் கௌதம முனிவரின் ஆச்ரமம் தென்படு

கிறது. ஸ்ரீராமபத்ரனும் அந்த ஆச்ரமத்தை யணுகுகிறார். அப்போது ஸ்ரீராமபத்ரனின் பாததூளி பட்டவாறே எதிரே யிருந்த ஓர் கல் அழகிய நங்கையின் ரூபத்தை யடைகின்றது. இதைக் கண்டு வியப்படைந்த ஸ்ரீராமபத்ரனிடம் விச்வாமித்ரமுனிவர் ‚இந்நங்கை அஹல்யை என்ற பெயர் கொண்டவளென்றும், தன் பர்த்தாவான கௌதமமுனிவரின் சாபத்தினால் வெகுகாலம் கல்லாய்க்கிடந்த இவள் இப்பொழுது உன் திருவடி தூளிபட்டவுடன் சுய ரூபத்தைப் பெற்றுவிட்டாள் என்றும் அஹல்யா வ்ருத்தாந்தத்தைக்கூறுகிறார். அப்போது தன் சாபத்தை நீக்கி மீண்டும் கௌதமர் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி விசேஷாநுக்ரஹம் செய்த ஸ்ரீராமபத்ரனை அஹல்யாதேவி பக்தியுடன் துதிக்கிறாள். அழகு, மென்மை முதலிய குணங்களால் தாமரைப் பூவைத் திருவடிக்கு உபமானமாகக் கூறுவது கவிகளின் இயல்பு. இதை யநுஸரித்து நம் ஸ்வாமி ஸ்ரீராமபத்ரனின் திருவடியை ‚பதநளின' என்று ரூபகமாக நிர்த்தேசித்தார். உபமேயப்பொருளை உபமானப்பொருளோடு ஒன்று படுத்திக் கூறுவதே ரூபகமாகும். திருவடியைத் தாமரைப் பூவாகக் கூறும்போது திருவடியிலுள்ள தூளியை தாமரையிலுள்ள மகரந்தப்பொடியாகவும், திருவடியிலுண்டான கங்கையை தாமரையிலுள்ள தேனாகவும் ஸாதித்தார். த்ரிவிக்ரமனாக அவதரித்த பகவானே ஸ்ரீராமபத்ரனாக அவதரித்தபடியால் ஸ்ரீராமபத்ரனுடைய திருவடிக்கும் கங்காஸம்பந்தமிருப்பதாகக் கூறினார். கங்கை நடராஜனான சிவனுடைய ஜடாமண்டலத்தில் நாட்டியமாடுகிறானென்று கங்கையின் மஹிமையைக்கூறும்முகத்தாலேசிறந்தவனென்று பிறரால் மதிக்கப்படும் சிவனும் பகவானின் திருவடி தீர்த்தமான கங்கையைச் சிரத்தினால் தாங்கி கங்காதரன் என்ற புகழும் சுத்தியும் பெற்றான் என்று பகவானின் பெருமையை ப்ரகாசப்படுத்தினார். நாட்டியமாடும் சிவனுக்கு, முடியிலுள்ள பாலசந்திரன் ஆபரணம் போலத் திகழ்ந்தானென்பதை விளக்க ‘ஜடகிரணசகலதர..........நடபதி' என்று கூறினார். அஹல்யாதேவிக்கு சிலாரூபப்ராப்தி பாத்மபுராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் போஜராஜன் முதலிய அனேககவிகளும் அஹல்யாதேவி கல்ரூபமாயிருந்தாளென்றே கூறுவதாலும் மற்றைப் புராணங்களுக்கேற்ப வால்மீகிராமாயணத்திற்கு வ்யாக்யானம் செய்த ராமபண்டிதர் முதலியவர்களும் சாபச்லோகத்திலுள்ள ‚அத்ருச்யா' என்ற பதத்திற்கு ‚நிஜரூபத்துடன் பிறருக்குக் காணமுடியாதவளாய் சிலாரூபத்துடன் காணத்தகுந்தவள்' என்று விரிவுரை எழுதியிருப்பதாலும் வால்மீகி ராமாயணத்திலும் ‚வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்மசாயினீ' என்பதற்குப் பதிலாக ‚வாயுபக்ஷா சிலாபூத்வா மலினா பஸ்மசாயினீ' என்று பாடபேதமிருப்பதாலும் நம் ஸ்வாமி இங்கு ‚ஜஹதுபலதநு' என்று ஸாதித்தார்.

இனி ‘குசிகஸுத' என்று ஆரம்பிக்கும் சூர்ணிகையினாலே விச்வாமித்ர முனிவர் அயோத்தியிலிருந்து கிளம்பி மிதிலாநகரமடையும்வரை வழியிலுள்ள அனேக ஸ்தலங்களைச் சேர்ந்த ப்ரஸித்தமான கதைகளைச் சொல்லி ஸ்ரீராமபத்ரனை மகிழ்வித்தார் என்பதைக் கூறுகிறார்:—

कुशिकसुतकथितनवविविधकथ! குசிகஸுதகதித நவவிவிதகத!

(தொடரும்)

ஸ்ரீ:

கவிதார்க்கிக ஸிம்ஹம்

கலயே ஸததம் கருணாஜலதிம் கருணாவிஷயம் கமலாதிபதே: ।
கலிவைரிஸடாரிவசோரஸிகம் கவிதார்க்கிககேஸரிஸூரிகுரும் ॥

கவிதார்க்கிகஸிம்ஹம் என்று மங்களாசாஸனம் பெற்ற ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் எப்படி ஆசார்யத்வ குணபூர்த்தியோடு ஆசார்யபங்தியில் முடி சூடிய மன்னராய் விளங்குகிறாரோ அப்படியே உத்தமகவித்வத்திற்கு நிரூபகமான ஸர்வ லக்ஷணங்களுடன் கூடின ஸ்ரீஸூக்திகளையே அருளிச் செய்திருக்கிறார். இதுவரையில்நமக்குத் தெரிந்த ஸம்ஸ்க்ருத தமிழ்க் கவிகள் எல்லோரையும்விட உத்க்ருஷ்டமான கவிஸிம்ஹம் இவர்தானென்று ஸ்வாமியின் க்ரந்தங்களை ஸேவித்த மஹாவித்வான்களும் கவிகளும் உத்கோஷம் செய்திருக்கிறார்கள். காளிதாஸன், கம்பன் முதலிய பெரிய கவிகளை விலக்கி ஆதிகவிகளான வ்யாஸர், வால்மீகி இவர்களின் க்ரந்தங்களோடு ஒப்பிட்டுப் பார்த்த பூர்வர்களும் ஸ்ரீதேசிகனின் காவ்ய ஸ்தோத்ர, நாடக க்ரந்தங்கள் தனியான விசேஷ ரஸ, குணாலங்கார பாவங்களுடன் ப்ரகாசிக்கின்றனவென்று பணித்திருக்கிறார்கள். இப்படி அந்யாத்ருச்யமான விஷயங்களை நமக்கு நல்கிய இத்தூப்புலரசு ஸாக்ஷாத் பகவதவதாரமென்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளுகிறோம்.

அநேக சாஸ்த்ரங்களிலிருந்து வாஸ்தவார்த்தங்களைப் பொறுக்கியெடுத்து எல்லா ஜனங்களும் உஜ்ஜீவிக்கும்படி அதிகாரிக்குத் தகுந்தபடி வெவ்வேறு ரீதியில் வேதாந்த விஷயங்களைப் புகட்டும் சக்தி ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும் ஸர்வஜ்ஞருமான இப்பிரானிடம்தான் காண்கிறோம் ஸ்வாமி அருளியிருக்கும் சொற்களின் அர்த்தபுஷ்டியும் ரஸமும் அநேகார்த்த சித்ர விசித்ர பாவங்களும் பரிச்சேதித்துப் பேசமுடியாதவை. இவர் க்ரந்தங்களில் காணப்படும் பதங்கள் அதி ஸரளமாயும் கம்பீரமாயும் அர்த்தாநுகுணமாயும் மற்றவர் க்ரந்தங்களில் காணப்படாத அத்யத்புத ரஸபாவங்களுடன் ஹ்ருதயங்கமமாய் விளங்குகின்றன. இவரது 'தாரக போஷக போக்யமான விரசென்றருளிய பழமொழிகள்' என்ற ஒவ்வொரு க்ரந்தமும் வேத பொக்கிஷம்போல், தாரணியில் வாழ்வார்க்கு வானேறப்போமளவும் வாழ்வைக் கொடுக்கும் தனியான ஓர் அத்யாத்ம சாஸ்த்திரம். ஒவ்வொன்றும் ஸர்வ ஹ்ருதய ரஞ்சிதமாயும், மந்த்ரஸித்தியோடு ச்ரோத்ர திவ்யௌஷதமாயும், ப்ரஸாதகுணமுடையதாயும் அமைந்திருப்பது ஸகலவித்யாவாஹினியான இம்மஹானின் ஜ்ஞாநோத்கர்ஷத்தையும் கவித்வ நைபுண்யத்தையும் உணர்த்துகிறது.

நம் ஸ்வாமியினுடைய கத்யபத்யங்களும் உபநிடத வ்யாக்யாநங்களும், ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்யஸூக்திகளின் விரிவுரைகளும், பூர்வாசார்யக்ரந்தங்கள் ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் முதலியவைகளைத் தெளிவாய் போதிக்கும் முறைகளும், மந்த்ரங்கள் மந்த்ராக்ஷரங்கள் இவைகளைக் கோர்த்து செய்திருக்கும் ஸ்தோத்ரங்களும், ஸர்வஸ்மாத் பரனான ஸ்ரீமந்நாராயணனின் ஸ்வரூபகுணங்களைக் கண்ணாடிபோல் காட்டுகின்றன. இவருடைய மனோரஞ்சிதமான ஸார ஸந்தேச மடலுரைகளும், ஸாரதமமான கட்டுரைகளும், ஆரமுதமான தொகைமாலைகளும்' அர்த்த சித்ரமயமாயும், ஸர்வலக்ஷண பூர்த்தியோடும், விளங்கும் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீ யாதவாப்யுதயம் முதலிய காவ்யரத்னங்களும் வர்ணிக்கமுடியாத எற்றம் பெற்றவை. நமது கவிசக்ரவர்த்தி அருளியிருக்கும் ரஹஸ்யங்கள் அதிகாரிகளுக்குத்தகுந்தபடி மறைமொழிகளின் ஸாரமான உபதேசம் போன்றவை. தென் வடமொழிகளிரண்டும் கலந்த தேன்மொழியில் மணிப்ரவாள நடையில் அருளிச்

செய்யப்பட்ட காதைகளாய் கேட்டமாத்திரத்தில் பரமாநந்தத்தைக் கொடுப்பவை இவர் ஒவ்வொரு கவிக்கு எடுத்துக்கொள்ளும் விஷயமும் அதை அருளிச்செய்யும் விதமும் மிகவும் உத்க்ருஷ்டமானவை. இவாருளிய ஸ்ரீ ஸூக்திகளுக்கு ப்ரேமையுடன் இவர் பெயரிட்டு வைத்ததே ஒரு ஆச்சரியம். ஒன்று தயாசதகம், ஒன்று ஹம்ஸ ஸந்தேசம், ஒன்று ரஹஸ்யபதவி, ஒன்று தத்வ மாத்ருகை, ஒன்று அபயப்ரதான ஸாரம் இம்மாதிரி பேரழகு உடையவை. ஸ்தோத்ரங்களில் சில ஸ்துதிக்கப்படும் பகவானின் திருநாமம் பெற்றவை – வரதராஜ பஞ்சாசத், ரகுவீரகத்யம். சில ஸ்தோத்ர விஷயத்தின் பெயருடையவை – தயாசதகம், ந்யாஸதிலகம். சில ஸ்தோத்ர பலவிசேஷத்தின் பெயர் பெற்றவை – அபீதிஸ்தவம், பரமார்த்த ஸ்துதி. வேதத்தையும் அதன் சுவையையும் அச்சுவைப்பயனையும் விரித்துரைக்கும் இவைகள் நம் கருணாநிதியின் பிற்காலத்தவர்க்கு பகவத் க்ருபையால் கிடைத்த பெரும் பாக்கியமே. நாலாயிர மறையின் ஸாரத்தைத் திரட்டி ஸ்ரீ தேசிக ப்ரபந்த மென்றதோர் செஞ்சொல் தமிழ் அருமறையை ஸ்வாமி நமக்களித்திருப்பது ஓர் அத்யத்புதச் செயல். இப்ப்ரபந்தம் அமிழ்தினுமினிய தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் அனைவரும் போற்றியுகக்கத் தக்க ஆச்சரியமானபேரறிவு கொடுக்கும் சீரிய நற்கவிகளை யடக்கிக்கொண்டு ஸர்வோபநிஷத் ஸாரமான பாமாலையாய் ப்ரகாசிக்கிறது. இவரது காவ்யங்கள் நவ ரஸத்தோடிருந்தும் ச்ருங்கார வீரரஸங்களை முக்கியமாயுடையவை. கானம் செய்யக்கூடிய வைதர்ப்பி, பாஞ்சாலி முதலிய பல ரீதிகளில் அநேக ஸ்தோத்ரங்களையும், உபஜாதி ஸ்ரக்தரை, முதலிய பல வர்ணங்களுள்ள விருத்தங்களையும் ஸ்வாமி அருளிச் செய்திருக்கிறார். பூர்வாசார்யர்களுடைய ச்லோகங்களையும், ஆழ்வார்கள் அருண்மொழிகளையும் ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் உரு, ரஸம் மாறாமல் நம் ஸ்வாமி மொழி பெயர்த்துக் கொடுத்திருப்பது மஹத்தான தோர் அலப்ய லாபமே. இவர் ஸாதித்திருக்கும் பதங்களும் ப்ரயோகங்களும் பூர்வாசார்யர்களாலும் மஹாகவிகளாலும் ஏற்கனவே உபயோகப் படுத்தப்பட்டிருந்தாலும் இவர் அவைகளுக்கு ப்ரகாணத்திற்குத் தகுந்த ரஸ பாவத்தை அத்யத்புதமாய் கற்பனை செய்து காட்டியிருக்கிறார். ஸர்வவித வித்யா ஸ்தானங்களையும் பராமர்சித்து ஸாரஸமாய் ஸர்வ லோக யோக க்ஷேம ஹேதுவாய் நம் ஸ்வாமி அருளிச் செய்திருக்கும் ஸித்தாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களை நாமெல்லோரும் அநுஸந்திக்க வேண்டும். நமக்குப்பிறவாமை தந்திடவே ஸ்ரீ வேங்கடநாதன் அவதரித்து விபவ தசையில் கல்யாணகுணங்களுட னடியார்களை வாழ்வித்து மஹோபகாரம் செய்தார். இப்பொழுது அர்ச்சையிலும் அவ்விதமே அவரது திவ்ய மங்கள விக்ரஹமும் அருண்மொழிகளும் நமக்கு ஆசார்யகம் செய்து வாழ்விக்கின்றன. பரமபுருஷார்த்தத்தை வேண்டுபவர்கள் இப்பரமாசார்யன் திருவடிகளில் பரம பக்தியோடு இவரது க்ரந்தங்களை ஸேவித்தால் நிச்சயமாய் நற்பதம் பெறுவார்கள். ஸ்ரீ தேசிகனை மஹரிஷிபோலும், ஆழ்வாரைப் போலவும், பரமாசார்யராகவும், பகவதவதாரமாயும் கொண்டாடுகிறோமல்லவா? 'அம்ருதஸ்ய தாரணே பூயாஸம்' என்றபடி இவருடைய க்ரந்தங்களில் ஏகதேசத்தையாவது பயின்றோமானால் பரப்ரம்ஹாநுபவ துல்யமான உணர்ச்சி பெற்று மறு பிறவியில்லாது பகவானிடம் போடிமைக்கு அன்பு பெற்று வாழ்வோம்.

நம் கவிஸிம்ஹத்தின் தர்க்க பாண்டித்யத்தைப்பற்றிச் சொல்ல இயலாது. லோகத்தில் கவிகளுக்கு தர்க்க பாண்டித்யமும் தார்க்கிகர்களுக்குக் கவித்வமும் ஸாதாரணமாய்ச் சேர்ந்து அமைவதில்லை. நம் ஸ்வாமியிடம் இவையிரண்டும் உத்க்ருஷ்டதமமாய்க் கலந்து மேன்மை பெற்று இவரது மதுர வாக்குகளில் நிறம் பெற்று ப்ரகாசிக்கின்றன. இவர் எப்படி கவி சிங்கமோ அப்படியே வாதி சிங்கமாகவும் எழுந்தருளியிருந்தார். இவர் வாத க்ரந்தங்களெல்லாம் ஸத்தர்க்கங்களாகவும்

நீதி உத்கர்ஷ ப்ரவசநங்களாகவும் ஸிம்ஹமொத்த சீர்மையோடு ஸத்யவாதங்களாகவும் அமைந்திருக்கின்றன. 'யதிவரனின் தரிசனமே போங்கிட வாதிகளை வென்ற நீதி மொழிகளின், வண்மை திண்மை வருணிக்கலாகுமோ, அண்ணலே, மெய்ய, நின் வியப்பே' என்றபடி இவர் ந்யாய சாஸ்த்ரத்தை கையாளும் திறமையே ஒரு வியப்பு. வேதார்த்தத்தை மனதில் ஸம்சய விபர்யயமில்லாமல் நன்கு நிலைக்கச் செய்ய ந்யாய சாஸ்த்ரத்தைக் கொண்டு முமுக்ஷுக்கள் வேத விருத்தமான மார்க்கத்தில் செல்ல வொட்டாமல் தடுத்து ஸ்ரீந்யாய பரிசுத்தி, ஸ்ரீந்யாய ஸித்தாஞ்சனம், என்ற க்ரந்தங்களைச் செய்து ந்யாய விஸ்தரமான வித்யாஸ்தானத்தை வஹித்தார். ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்திகள் பரமதங்களுக்குப் பரிஹாரமாய் அமைந்தது, ஸ்ரீ தத்வமுக்தாகலாபம், சததூஷணீ முதலிய இவரது தர்க்க ஸ்ரீஸூக்திகளின் பலத்தாலும் வீர்யத்தாலுந்தான். பிறர் சொல்லாத ஆக்ஷேபங்களைக்கூட மஹரிஷிகளைப்போல் ஸ்வபுத்தியாலே சங்கித்துப் பரிஹாரமருளிச் செய்திருப்பது ஓர் அற்புதம்.

'ஆசாமதங்கஜகணாநவிஷஹ்ய வேகாந்
பாதே யதி க்ஷிதிப்ருத: ப்ரஸபம் நிருந்தந் |
கார்ய: கதாஹவ குதூஹலிபி: பரேஷாம்
கர்ணே ஸ ஏஷ கவிதார்க்கிக ஸிம்ஹநாத:'

என்று இவர் தாமேயருளியபடி கவிதார்க்கிக வல்லவர்களை ஜயிக்கத் தம் நாக்கு நுனியாகிய ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீஹயக்ரீவர் வீற்றிருந்து ஸிம்ஹ கர்ஜனம் செய்வதால் நம் ஸ்வாமியின் தார்க்கிக மொழிகளைக் கேட்டமாத்திரத்தில் துர்வாதிகள் பக்நர்களாகி உடையவர் திருவடியில் ஆச்ரயிப்பார்கள். மேலும் ஸ்ரீபாஷ்ய விஷயங்களை எல்லோரும் எளிதில் மனதில் தரித்து அநுஸந்திக்கும்படி க்ஷீரராசியான இனிய ச்லோகங்களால் 'அதிகரணஸாராவளி' என்றதோர் அற்புத க்ரந்தத்தை நமக்குக் கொடுத்து அவரடியார்களுக்கு மோக்ஷம் ஸித்தமென்று காட்டியிருக்கிறார். தம் வாதங்களில் பிறர் மீது குற்றம் கூறுவதொன்றுமில்லாமல் ஸாமாந்யமான அதிகாரிகள் பிறமதஸ்தரின் வஞ்சனைக்குட்பட்டுக் கெடாதவாறு அம்மதங்களின் தோஷங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். இவ்வவதார புருஷனின் வேதமார்க்காநுஸாரித்வமும், ந்யாயசாஸ்த்ர ப்ரவீணதையும் வாதங்களின் விஷயத்தை நிஷ்பக்ஷபாதமாக விசாரிக்கும் நீதியும் இவர் க்ரந்தங்களில் நன்கு புலப்படுகின்றன. தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கும் சக்தியிருந்தும் இவர் ப்ரமாண சரணராகவே யிருந்தார். ப்ரமாணங்களுக்கு மீறி ஈஷத்தும் நிரூபிக்கவில்லை. இவ்விஷயத்தில் நம் ஸ்வாமி காட்டியிருக்கும் விநயம், பொருமை, பரமகாருண்யம் முதலிய கல்யாணகுணங்கள் அநுபவிப்பவர்களுக்குத் தான் தெரியும். 'பாராவர்யம் விவிஜ்ய ப்ரதமமவிததைராகமைஸ்தத்வவர்கே, ஸம்ஸாரே தீவ்ரபீதி: பரஸமதிகமே தீவ்ரநிஷ்பந்நராக: | கச்சித் வித்யாவிசேஷம் ஸபரிகரமதிஷ்டாய சாந்தாந்தராய:, ஸம்பத்ய ப்ரும்ஹ புங்க்தே நிருபதிகமநுவ்ருத்திரித்தம் ச்ருதார்த்த:' என்ற இக்கரை புரண்ட கருணைக்கடலின் மதுரமொழியைப் படித்துப் படித்து அதன் திகட்டாத வின்பத்தை யநுபவியுங்கள்.

அன்பர்க்கே யவதரிக்கும் ஆயனைப்போல அன்பர்க்கே யவதரித்து அன்பை யணிகலமாகக்கொண்ட நம் ஸ்ரீ வேங்கடநாதனின் மஹோபகாரத்திற்கு, 'அமலனுமக்களித்தபெயரொடும், கமலையுகந்தளித்த விருதொடும், நல்லாருலகம் கற்பத மெய்திட பல்லாண்டிருமென்றிசை பாடுவமே' என்றபடி இக்கவிதார்க்கிக சிங்கத்திற்கு தொண்டு பூண்டு தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடி பல்லாண்டும் பல்லாண்டே பாடி உய்வோமாக.

விஜயதாம் குருபங்க்திசிகாமணிர் விஜயதாம் யதிராஜமதத்வஜ: |
விஜயதாம் கவிதார்க்கிககேஸரீ விஜயதாம் நிகமாந்தகுரூத்தம: ||

ஸ்ரீ:

கவிகண்டீரவ:

தேசிகோத்தமனான நம் நிகமாந்த குரு அவதரித்த புரட்டாசித் திருவோணத்தை அங்கியாக நிறுத்தி ஆங்காங்கு நடைபெறும் நமதாசார்ய ஸார்வபௌமனுடைய மஹோத்ஸவத்தில் தேசிகசிஷ்யர்களான நாம் கலந்து கொள்ள வேண்டுமென்பது 'தேவமிவோபாஸீத' 'யதா தேவே ததா குரௌ' என்ற தைவத்தைப்போல் ஆசார்யனை யுபாஸிக்க வேண்டுமென்றர்த்தமுள்ள சாஸ்த்ரப்ரமாணங்களுக்கு அநுரூபமே. 'போற்றி யுகப்பதும்' 'வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்' என்ற ப்ரகாரங்களிலேதேனுமொன்றை பின்பற்றி பொழுது போக்குவதும், ஸ்வரூபாநுரூப கைங்கர்யமேயாகும்.

போற்றியுகக்க வேண்டுமானால் நம் தேசிகனுடைய ஜீவியசரித்திரத்தை சரியானபடி தெரிந்துகொள்ள வேண்டும். 1. தேசிகன் என்பவர் யார்? 2. அவர் கல்வியறிவு எப்படிப்பட்டது? 3. இயற்றிய நூல்கள் எவை? அதன் சிறப்பு எப்படிப்பட்டது? 4. நாட்டிற்காகச் செய்த நன்மைகளென்ன? 5. அவரை ஏன் இன்று வழிபடல் வேண்டும்? என்ற அர்த்தபஞ்சகத்தை அறிந்தாராய்தல் வேண்டும். இவைகளை யறிந்தவர்கள்தான் 'விஜ்ஞாதமவிஜாநதாம்' என்ற கணக்கில் இவர் ஜீவிய சரித்திரத்தில் சில அம்சங்களை அறியாதவர்களாயிருந்தபோதிலும் அறியப்பட வேண்டியதில் நன்கு அறிந்தவர்களாகவே கருதப்படுவார்கள். ஆகையால் முன் சொன்னவைகளை ஆராய்வது மிகமிக அவசியமே. அதுகளுள் முதன்மையான தேசிகன் என்பவர் யார் என்பதற்கு பலர் பலவிதமாக சமாதானமுல்லேகித்துள்ளனர். இவரது அமாநுஷ சரித்திரத்தை நினைத்து 'கலௌ வேங்கட நாயக:' என்று கலியில் கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படும் ஸ்ரீ வேங்கடேசனின் அவதாரமோ இவரென்பர் சிலர். சிலரிவரது துர்வாதிரூப பிசாசங்களின் நிரஸந நைபுண்யத்தை யறிந்து பூத பிசாச நிரஸந ஸமர்த்தமான விஷ்ணு கண்டையின் அதாவது— திருமலைமால் திருமணியின் அம்சமோ என்று போற்றுவர். வேறு சிலர் சாரீரகத்தில் இவருக்குள்ள தெளிவையும் கர்மாநுஷ்டான வைராக்ய பூர்த்தியையும் கணிசித்து பகவத்பாஷ்யகாரரின் அம்சமோவென்று தேறி நிற்பர். இங்கு முதலிரண்டு உல்லேகங்களில் வேறு சில ஐதிஹ்யங்களும் காரணமாகும். அவை உலகமறிந்ததானபடியால் அதன் நிரூபணமிங்கவசியமில்லை. ஸ்வாமிதேசிகன் யாருடைய அவதாரமாக வேணுமிருக்கட்டும்; தக்கசான்றுகளிருப்பதால் யாருமதில் விப்ரதிபத்தி யடையப்போவதில்லை. நாம் கூறப்போவது யாதெனில் தேசிகன் ஓர் கவிகண்டீரவம் என்பதே. 'கவிதார்க்கிக கேஸரீ' 'கவி கதக ம்ருகேந்த்ர:' என்றவிடங்களில் தேசிகன் ஓர் கவிஸிம்ஹமாகப் போற்றப்படுகிறார். ஸிம்ஹமென்றாலும் கண்டீரவமென்றாலும் பொருள் ஒன்றுதான். இப்படி கவிஸிம்ஹமாகப்போற்றப்படுவதால் இவருக்கு கவிதாநிர்மாணத்திலுள்ள பண்பு ப்ரகாசமாகிறது. கவிதைக்கே ஓர் தனிப்பட்ட சக்தி உண்டு. ச்ருதி, இதிஹாஸ, புராணங்களைவிட மஹாகவியின் கவிதைக்கு அரிய சாஸ்த்ரார்த்தங்களையும் உள்ளன உள்ளபடியே மனதில் பதியவைக்கும் பெருமையுண்டென்று ஆலங்காரிகர்களின் நிஷ்கர்ஷம். 'காந்தா ஸம்மிததயோபதேச யுஜே' என்று கண்ணுக்கினிய ஓர் இல்லறக்கிழத்தி தன் கணவனுக்கு ஸமயமறிந்து பக்குவமாக சொல்நயத்தால் விஷயமறியச் செய்வது போன்றது கவிதையின் உபதேசமுறை என்பதாகவல்லவோ ஆலங்காரிகனுதாஹரித்திருப்பது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கவிதை பண்ணும் பாக்யம் வாய்ந்தது நம் கவிகுஞ்சரமென்றால் மிகையாகாது.

இவருக்கு வடமொழியிலும் தென்மொழியிலும் கவிபாடுமாற்றல் ஸஹஜமாகயிருந்தது.

இவர் கவிதைகளில் ஓர் மிடுக்கு மின்னும். என்னே! வசனகாம்பீர்யம். என்னே! ஆழ்ந்தகருத்துகள். என்னே! வெட்டென கூறுந் தீர்ப்புகள். என்னே! அரிய பல விஷயங்களேயும் தெள்ளென தெளிவிக்கும் திறன். இப்படிப்பட்ட சிறப்புகள் நம் கவிமணியின் கவிதைகளில் காண இயலாதென்றால் வேறு எங்கு காணவியலும்? ‘ஒன்றொன்று தானேயமையாமோ’ என்ற வகையில் இவரது கவிதைகளில் ஏதேனுமொன்றை எடுத்துக்கொண்டாலே போதுமானது இவரது கவிதா நிர்மாண நைபுண்யத்தை நிரூபணம் பண்ணுவதற்கு. ‘பாவாஸ்ஸந்தி பதே பதே’ என்று இவர் பேசிய பாசுரங்களின் பதந்தோறும் அநேக தாத்பர்யங்களுள்ளனவென்று தீக்ஷிதரும் விஸ்மிதரானாரல்லவோ.

கவிபாடவல்ல ஓர் உண்மையான கவிஜ்ஞன் என்றால் அவன் கவிகளில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் நான்கு உண்டு. அவையாவன:— 1. கவியின் பரந்த நோக்கம். அதாவது தான் ஒருவனே உயர்ந்தவன். தான் ஒருவனே வாழவேண்டும் என்ற குறுகிய மனப்பான்மைக்கு எதிரிடையான மனப்பான்மை. 2. உலக இயல்பையறிந்து பாடுந் திறன். 3. மாம்ஸ சக்ஷுஸ், கல்பனு சக்ஷுஸ், தாத்பர்ய சக்ஷுஸ் என்ற மூன்று கண்களேயுங் கொண்டு வஸ்துக்களே ஆராய்ந்து பார்க்குமாற்றல். 4. சேதனனே ஈச்வரனேடு பிணைக்கும் பண்பு என்பவனேயாகும். உபக்ரமோபஸம்ஹாராதிகளேக்கொண்டு வாக்யதாத்பர்யத்தைப்போல் மேல் சொன்ன நான்குகளேயுங் கொண்டு கவியின் யோக்யதையை நிர்ணயித்து விடலாம். ஆனபடியால் நம் தூப்புல் மணியும் கவிமணியாக இருக்கவேண்டுமானல் அவரிடம் மேற்சொன்ன நான்குமிருக்கின்றனவர் என்று ஆராய்தலவசியம். அதில் முதல் விஷயமான ‘பரந்த நோக்கம்’ என்பது நம் கவிபுங்கவரிடம் புகுந்திருந்தனவென்பதை முதலில் சிறிது நிரூபிப்போம்.

ஸுபாஷித நீவியில் அநிபுண பத்ததி முதல் ச்லோகம் 2 ம் பாதம் ‘மஹ்யமபி ப்ரதம துர்ஜநாய நம:’ என்பதொன்றே இதன் நிரூபணத்தில் தக்க சான்றாகுமென்பது திண்ணம். மங்களச்லோகமான இதில் முதல் பாதத்தால் ஸர்வேச்வரபஜநம்பண்ணி அடுத்த பாதத்தால் துர்ஜனங்களுக்குள் முதலில் கணனம் பண்ணப்படவேண்டியவெனக்கும் ‘நம:’ என்று ஸாதிக்கிறார். ‘துர்ஜந: பரிஹர்த்தவ்ய:’ ‘நாஸக்பி: கிஞ்சிதாசரேத்’ என்று ஸல்லாபத்திற்குமநர்ஹனுக துர்ஜனனே த்யஜிக்க வேண்டுமென்றல்லவோ நீதி யுணர்த்துகிறது. அப்படிப்பட்ட துர்ஜனனுக்குள் அக்ரதாம்பூலம் தனக்குத்தானென்று ‘ப்ரதமதுர்ஜநாய’ என்பதால் கோஷமிடுகிறாரென்றால் என்னே! நம் கவிதிலகத்தின் மனோவைசால்யம். இதனுலிவருக்குள்ள தானே உயர்ந்தவன் அதாவது தானே ஸஜ்ஜனன் என்கிற துரஹங்கார நிரீச்வரதை நிலைநிறுத்தப்பட்டது.

அடுத்தபடியாக தானே வாழவேண்டுமென்ற குறுகின மனப்பான்மையுமிவரிடம் பெறவில்லை என்பதை நிரூபிப்போம். தசாவதாரஸ்தோத்ரத்தில் ‘தேவோ நஸ் ஶுப மாதநோது’ என்கிற வம்சத்தை எடுத்துக்கொள்வோம். அவ்விடத்தில் நம் கவிபூஷணம் தன்னுடன் உலகத்தாரையுங் கூட்டிக்கொண்டு ஸர்வேச்வரனிடம் மங்களத்தைக் கோருகிறாரென்பது அபிஜ்ஞர்களறிந்ததே. இப்படியே மேலும் ‘மாத்ஸ்யம் வபு: பாது ந:’ ‘தந்வந்து பத்ராணி ந:’ என்ற விடங்களில் ஜகத்ரக்ஷணத்தையும் மங்களத்தையுங் கோருகிறாரென்பதும் அக்ஷராஸ்யர்களுக்கு வ்யக்தம். ஷோடசாயுத ஸ்தோத்ரத்தில் சென்றாலோ இவர் மனோநிலை அதிவிசித்ரம். ‘பாது வஸ் தத்பரம் சக்ரம்’ ‘பரசு: பரிபாது வ:’ ‘ஸ குந்த: பாலயேத வ:’ என்றவிடங்களில் வ: வ: என்று தன் ஸம்பந்தத்தை நீக்கி உங்களை சக்ராயுதம் ரக்ஷிக்கட்டும், கோடரி ஆயுதம் ரக்ஷிக்கட்டும், குந்தாயும் (ஈட்டி) ரக்ஷிக்கட்டும், என்று உலக ரக்ஷணத்தை மனோரதித்தாரே தவிர்ந்து தன்னேயும் சேர்த்துக்கொண்டு நம்மை ரக்ஷிக்கட்டும் என்று ஸ்வநலத்தை கிஞ்சித்தும் நாடினாரல்லவே. ‘பாது வஸ்தத்பரம் சக்ரம்’ என்றவிடங்களில் ‘வ:’ என்கிறதை விலக்கி

நம்மை என்ற பொருளுள்ள ‘ந:’ என்கிற பதத்தைப் பொருத்தி ‘பாது நஸ்தத்பரம் சக்ரம்’ போன்று எல்லாவிடங்களிலும் அநுஸந்திக்கலாமே. அப்படி யனுஸந்தித்தாரில்லையே. விருத்தபங்கம், யதிபங்கம் போன்றவையுமில்லையே. ஆனபடியால் இவ்விடங்களில் ஸ்வரஸத்தைக்கருதாத பரந்தநோக்கந் தவிர்த்து வேறு என்ன கதி சொல்ல முடியும்.

2-வது விஷயத்தையும் சிறிது பராமர்சிப்போம். உலக இயல்பையறிந்து பாடுந்திறனும் நம் கவீந்த்ரனிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது: ஸுபாஷித நீவியில் ‘பச்யதி பரேஷு தோஷாந ஸதோऽபி ஜநஸ் ஸதோऽபி நைவ குணாந் | விபரீதமிதம் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: ||’ என்று ஒரு ச்லோக முள்ளது. இதைக்கணிசித்தால் இத்திறனிவரிட மிருந்தது நன்கு விளங்கும். இதன் பொருள் கீழ் வருமாறு.- பாமரஜனம் அன்னியனிடத்தில் இராத தோஷங்களை இருப்பதாகக் கருதுகிறது. இருக்கும் குணங்களையோ இருப்பதாகக் கருதுவதே இல்லை. ஆனால் தன் விஷயத்திலோவெனில் இதற்கு நேர் மாறுபாடுதான். தன்னிடத்திலுள்ள தோஷங்களை இருப்பதாகக் கருதுவதில்லை. இராத குணங்களையுமிருப்பதாக கருதுகிறது. இப்படி கருதுவதற்குக் காரணம் ப்ரக்ருதிகார்யமான மோஹரூபமான அஞ்ஜனத்தின் மாஹாத்ம்யமே என்று. இதை நோக்கிடில் நம் கவிதிலகத்தின் உலகறிவு நன்கு விளங்கியே தீரும். புத்தியில் ப்ருஹஸ்பதியாக இருந்திடினும் உலக இயல்பை அறிந்து கவிபாடும் பண்பு பெற்றிருந்தால்தான் அவர்கள் பாசுரம் அபிஜ்ஞர் கோஷ்டியில் விலை பெறமுடியும். ஆகையால் உலகறிவு கவிபாடுவதற்கின்றியமையாத சாதனமேயாகும். இந்த சாதனமும் நம் கவிசிங்கத்தினிடம் ஸித்தமென்று மேற்சொன்ன ச்லோகத்தால் ஊர்ஜிதமாயிற்று.

இதுபோலவே 3 வது விஷயமாகச்சொன்ன திறனும் நம் தேசிக கவியிடம் திகழ்ந்து நிற்கிறதென்பது கண்ணுள்ளோருக்குக் கண்கூடு. இதையும் முன்சொன்ன ‘பச்யதி பரேஷு தோஷாந்’ என்றச்லோகமே விளக்கிக்காட்டும். இதனையும் சிறிது விளக்குகிறோம். நம் கவிகேஸரீ அநிபுண பத்ததியில் பாமரனியல்பை கவியாகப்பாடவேண்டுமென்று ஸங்கல்பித்துக் கொண்டது. மாமிச சக்ஷுஸ்ஸை திறந்து பாமர வ்யக்தியைக்கூர்ந்தும் கவனித்தது. சிந்தனைசிகரத்தினுச்சியை எறியது. உடன் கற்பனைக் கண்ணையுந்திறந்தது. அவ்வளவுதான் அதன் கண்ணுக்கு ஓர் கரிமலை புலப்பட்டது. அதை அஞ்சனமாகத் திரட்டிற்று. அதுதான் மோஹமென்பது. திரண்டின அஞ்ஜனத்தை பாமரன் கண்ணில் அணியச்செய்து அழகு பார்த்தது. பாமரன் செய்கைக்கும் ஸ்வபாவத்திற்கும் பொருத்தந்தெரிந்தது. அவ்வளவுதான் உடனே தன் மனதிலதை படமாக எடுத்து விட்டது. ச்லோகம் என்ற திரையில் உலகத்தாருக்குக் காண்பிக்க விழவுஞ் செய்து விட்டது. இச்லோகம் முன் சொன்ன ‘பச்யதி பரேஷு தோஷாந்—மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ:’ என்பதுதான். இதன் பொருள் முன்பே விவரிக்கப்பட்டதுதான். மோஹத்தை அஞ்ஜநமாகக் கல்பனை செய்திருப்பதுதான் இங்கு கவனிக்கவேண்டியது.

இதுபோலவே கவிதைகளில் நம் கவிரத்னம் கருத்துக்கண்ணை (தாத்பர்யசக்ஷுஸ்ஸை) செலுத்தியிருப்பதும் விமர்சகர்களினுள்ளத்தில் வ்யக்தம். இது விஷயமும் முன் சொன்ன ‘பச்யதி பரேஷு’ என்ற ச்லோகத்திலேயே தெளியலாம். கேண்மின். உலகத்தில் மண்ணில் மறைந்துள்ள நிதியை யடைவதற்கு அஞ்ஜனமணிவதுண்டு. உடன் நிதியும் கண்ணுக்கிலக்காகும். சாதனங்களைக் கொண்டு நிதி சேகரஞ் செய்யப்பட்டுவிடும். இவ்வண்ணமே கல்பித அஞ்ஜனமணிந்த பாமரமனிதனும் ஓர் நிதியை அடைந்தே தீரவேண்டும். ஆனால் அடைகிறானில்லை. நிதியை கிட்டித்தானிருக்கிறான். ஆனாலதை அறிகிறானில்லை. ‘ஹிரண்ய நிதிம்’ என்று சொல்லப்பட்ட ஓர் விலக்ஷணநிதி ஒவ்வொருவன் சரீரத்திலுமிருந்துதான் வருகிறது. அத

ஸ்ரீ:

சற்குணசிகரம்

சிலர் சொல்லுவதுண்டு 'நான் முன்பே நிறம் இழந்தேன். நீங்கள் இனி வளர்ந்து விளங்கப்போகிறவர்கள். ஆகையால் குற்றம் கழித்து குணம் கூட்டி நடந்து நற்பெயர் பெறுங்கள்' என்று இவ்வாறு நன்னடத்தையில் தனக்கு ஒரு கடமையோ, கவலையோ இல்லை போலும், பிறர்க்கே அதில் கடமை மிகுந்திருப்பது போலும் பரோபதேசம் செய்வது மிக எளிது. இங்ஙனம் பேசுபவர் உண்மையிலேயே ஒருகால் நன்னடத்தையினின்றும் நழுவியிருக்கலாம். அல்லது பொறுப்பின்றி புறம் பேசித்திரிவதில் ஒருவித சுகமிருப்பதாகக்கருதி தான் முன்பே பிசகினதாகப் பொய்ப் பேசி பரோபதேசம் செய்யவும் புறப்படலாம். இப்படியும் 'சிலருளரோ' என்று இதைக் கண்ணுறுபவர்கள் கேட்கலாகும். நாம் கண்ணாரக் கண்ட உண்மையிது. சமீபத்தில் எங்களூரில் ஒருவரைக்காணநேர்ந்தபொழுது 'தனக்கு திரைப்படப் பிடிப்பு மேடையில் பன்னாள் பழக்கமுண்டென்றும், அவண் ஆண் பெண் பாலரின் அவலநிலைமை தனக்கு நன்கு தெரியுமென்றும் அங்கு நடைபெறுவதுகேவலமான கலியின் கேலிக்கூத்தே; ஆதலின் எவரும் திரைப்படக்காட்சியில் எவ்விதமான இயைபும் கொள்ளலாகாது. பெண்பாலர்கள் இதில் மிகவிழிப்புடனிருக்க வேண்டும்' என்றுமவர் பேசக்கேட்டேன். ஆனால் பிறகு அவர் செய்தது என்ன? அவண் அவருக்கு எங்களூரார் அளித்த அன்பளிப்பை அன்றிரவே திரைப் படக்காட்சியின்பொருட்டுச்செலவழித்துவிட்

னிடம்தான் இவன் இளைப்பாறுகிறான். பகலில் அதிலிருந்துதான் உலாவப்புறப்படுகிறான். ஏன்—அவன் நடப்பதே அந்த நிதியின் மேல்தான். காலடியிலே அந்நிதி இடிபடுகிறது. ஆகிலுமிவன் கண்ணுக்குப் புலப்பட்டால்தானே அவ்விலக்ஷண நிதி. கண்டிருந்தால் இவன் விருத்தங்கள் வேறுபட்டல்லவோவிருக்கும். இவன்தான் விலக்ஷணமான மோஹாஞ்ஜன மணிந்திருக்கிறானே. ஆகையாலிவன் ஸர்வஸ்மாத் பரனான ஸர்வேச்வரனிடத்திலும் நமக்கு ஸஜாதீயன் என்ற அத்யவஸாயமுள்ளவனாகவும், 'வெண்ணை திருடியவனும் பெண்ணை திருடியவனும் ஓர் கடவுளா' என்று கோஷமிட்டு, அவனுடைய ஸௌலப்யாதி குணங்களை அறியாதவனாகவுமாகிறான். தன் விஷயத்திலோ வெனில் இதற்கு மாறாக தான் ஸ்வதந்த்ரன் என்று அத்யவஸாயமுள்ளவனாகவும், தன்னிடமுள்ள ஈச்வரபாரதந்த்ர்ய குணத்தை அறியாதவனாகவுமாகிறான் என்கிற வரியவர்த்தம் மேற்சொன்ன ச்லோகத்தில் கருத்தாக நிற்கும்.

நான்காவதான பண்புமிவரிடம் ப்ரகாசிக்கிறதென்பதற்கு 'ஒரொன்றுதானே யமையாதோ' என்ற கணக்கில் ஸுபாஷித நீவியைக்கொண்டே நிரூபிக்கிறோம். காண்மின்— 'ப்ரதமஸுஜநாய பும்ஸாம்' 'மஹ்யமபி ப்ரதமதுர்ஜநாய நம:' என்று முதல் ச்லோகம். ஸுஜநங்களில் முதல்வரான ஸர்வேச்வரனின் பொருட்டும், துர்ஜநங்களில் முதல்வனான என்பொருட்டும் நம:, நமஸ்காரம் என்று இதன் பொருள். இதில் ஸர்வேச்வரனுடைய ஸௌஜந்ய ஸ்வபாவமும் 'ப்ரதம' என்றதினால் ஆதித்வம்—அதாவது பிறப்புமிறப்புமற்றிருக்கையும். சதுர்த்தியால் அவனே ஸேவ்யன் என்றும் சேதனன் ஸேவகனென்றும் 'நம:' என்பதால் ஸர்வேச்வரனை அடையுமுபாயமும், 'ஸக்ருதுபகார' என்ற உத்தரவாக்யத்திலுள்ள பதத்தினால் சேதனனுக்கு பரமநிச்ரேயஸத்தைக் கொடுப்பவன் ஸர்வேச்வரனே என்றும், ஆகையால் எல்லோரும் அவனையேயடைய வேண்டுமென்று ஶரண்யனோடு சேதனனைப் பிணைப்பதால் இவரே ஓர் உண்மைக் கவிஞர் கவிகண்டீரவம் என்பதற்குத் தட்டில்லை. இதனால் தேசிகன் என்பவர் யார்? என்ற விஷயம் நிரூபிதமாயிற்று.

டார். அதனைக்கண்ணுற்ற எங்களுள் துணிவுள்ள ஒருவர் அவரையணுகி ‘நீர் உபதேசித்தவை உமக்குத்தகாவோ?’ என்று வினவ, அவரும் ‘நான்தான் முன்னமே கெட்டலைந்தவனாயிற்றே என்னைப்பற்றி இனியென்? இதுகாறும் நல்வழிப்பட்டுள்ள நீங்கள்தான் மேலும் என் உபதேசத்தைப் பின்பற்றவேண்டும்’ என்று மறுமாற்றமளித்தார். இவ்விதம் பலருக்குள்ள மனப்பான்மையை மஹாபாரதம் மிக அழகாகச் சித்தரித்துக் காண்பிக்கின்றது:- ‘யதா ஹி மலிநைர் வஸ்த்ரை: யத்ர தத்ரோபவிஶ்யதே। ஏவம் ப்ரப்ரஷ்டசாரித்ர: வ்ருத்தசேஷம் நரக்ஷதி॥’ மாசற்ற வெண்ணுடை அணிந்தவர்கள் தாம் உட்கார உசிதமான நல்லிடம் தேடி அங்குமிங்கும் நோக்கும்பொழுது அங்கு வந்தான் ஒரு அழுக்குடை உடுத்தவன். அருகிருந்த இருக்கையில் அலட்சியமாய் அமர்ந்தான். அதன் தரமும் பார்த்திலன். ‘மாசு படிந்த இடத்திலமர்ந்தாயே’ என்று கேட்பின் ‘என் உடைக்கு இது ஒரு கேடோ’ எனப்பதிலளிப்பான். நல்வழியினின்றும் ஒருக்கால் வழுக்கி விழுந்தவனும் இங்ஙனமே எந்த இழிச்செயலும் செய்யத்துணிந்து இழிந்திடுவான். நல்லோர்கள் நாவினாலும் நவிலக்கூசும் கொடும்பாவத்தையும் நொடியில் செய்திடுவான். ‘எனக்கினி விளைந்திடும் வினையும் ஒன்றுண்டோ’ எனவும் கூறிக்கொள்வான். இவ்விதம் சிந்திப்பதும், செய்வதும் தவறு என மஹர்ஷி இதன் மூலம் நமக்குணர்த்துகின்றார். மேன்மேலும் உடையழுக்கடையாவண்ணம் நாம் நல்லிடம் பார்த்து உட்காரவேண்டுவது அவசியமல்லவா? சில பாவச்செயல்களைச் செய்ததுடன் நாம் கைவாங்கி நின்றுவிடலாகாதா? வழுக்கி விழுந்தவனும் எழுந்திருப்பது உண்டல்லவா? ஆக நாமிங்கு செய்யவடுப்பதுஎன்ன? மறுமொழி ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸாதிக்கின்றார் கேளுங்கள்:- ‘குணசைலாக்ரமாரோப்ய ஸ்வைராத்மாநமாத்மநா। நித்யஸங்கிதவிப்ரம்ஸம் நித்யாயதஸ்வரூபம் யவ:॥’ மங்களமாய் வாழவிருப்பும் மாந்தர்காள்! நான் சொல்வதைக்கவனியுங்கள். மலையுச்சியில் நிற்கும் மனிதன் என்ன எண்ணுகின்றான்? ஒவ்வொரு கணமும் தான் கீழே விழாதபடி நிலைத்து நிற்க என்ன பாடு படுகின்றான்? அங்ஙனமே நற்குணக்குன்றின் சிகரத்தில் நீங்கள் நிலைபெற்று நில்லுங்கள். உங்களை யாரும் அச்சிகரத்தில் எளிதில் ஏற்றி வைக்க துணைவரமாட்டார்கள். தன் கை வலிமை கொண்டே ஏற வேண்டும். மற்றவர்கள் நமது குணங்களை மறைத்தும் திரித்தும் கூறி வம்பும் துன்பமுமே செய்து வருவார்கள். நாமே நம்மைக்கட்டுப்படுத்தி நல்வழியுய்த்து, குணசிகரத்தில் ஏற்றிவைத்துக் கொள்ளுவோம். எக்கணத்திலும் நாம் அங்கிருந்து உருண்டு விழக்கூடும் என எதிலும் வழிப்புற்றிருக்க வேண்டும். அஸூயையை அகற்றி கோபத்தைக் களைந்து ராகத்தை தூரத்தில் நிறுத்தி வைக்க வேண்டும். துர்குணத்தூறுகளில் நாம் பாய்ந்திடலாகாது. இத்தகைய குணசிகர வாஸம் நமக்கு சில நாட்களில் கிடைத்திடாது. ஒவ்வொரு அங்குலமும் போராடியே பெறவேண்டும். ஆக எவனும் தன்னைத்தாழ மதிப்பிட்டுத் தான் செய்யக்கூடாதது ஒன்று உலகினில் உண்டோ என நினைந்து உழலக்கூடாது. பின்னை ஒவ்வொருவனும் தன் மான உணர்ச்சியுடன் ஸகலகுணங்களையும் கைக்கொள்ள முயன்று முழுகவனத்துடனும் நல்வழியில் நிலைத்து நிற்க முற்படவேண்டும் என்று கூறினாராயிற்று.

இனி ‘நற்குணங்கள்’ எனப் பொதுப்படக் கூறியவற்றுள் சில குணங்களின் எல்லைநிலம் பகவானாக இருக்கும்படியை ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளியபாங்கு இங்கு சிறிதுப்ரஸ்தாவிக்கப்படுகிறது:- ஸ்ரீ விபீஷணாழ்வானைப் பெருமாள் கடைசியில் கைக்கொண்டது ப்ரஸித்தமான விஷயம். சத்ருபக்ஷத்திலிருந்து வந்தவன், சத்ருவின் ஸஹோதரன், என்றெல்லாம் அவனைப்பற்றிப்பேசினார்கள். ‘விடவேண்டு’மென்று வேண்டினார்கள். அப்படி வற்புறுத்தியவர் யாரோ? எத்தகையரோ? என்று நினைக்கவேண்டாம். ஸ்ரீ பெருமாளிடம் பெரிதும் பரிவு கொண்ட ஸுக்ரீவ மஹாராஜர் முதலியோரே. ஆயினும் ஸ்ரீபெருமாள் சத்ருஸஹோதரனைச் சேர்த்துக்கொண்டார். இது ஸ்ரீவி

பீஷணாழ்வானிடம் கொண்ட க்ருபையின் கார்யம். இத்துடன் நின்றிருந்தால் பகவானிடம் உள்ள க்ருபைக்கும் உலகத்தவர்களின் க்ருபைக்கும் என்ன வாசி தேறும்? உலகிலும் ஆப்தர் பேச்சை அதிலங்கனம் செய்து தம் கருணைக்குரியவரைக் காப்பாற்றுவதுண்டு. ஆக இதனால் பகவத் க்ருபைக்கு என்ன ஏற்றம்? இங்கு சிறிது கவனித்தால் பகவத் க்ருபையின் தனிச்சிறப்பு நன்கு புலப்படும். சத்ருவின் ஸம்பந்தமுள்ளவனையும் விடவேண்டும் என்று பரிவர் முன்னிலையில் 'சத்ரு தானும் இசைந்தால் ஸ்வீகரிப்பேன்' என்று பேசிய புருஷோத்தமனின் திருவுள்ளம் எவ்வளவு பரந்த நோக்கமுடையது! எத்தனைப் பேரிரக்கம் அதில் குடிகொண்டுள்ளது? 'விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்!' என்று பேசப், பெருமாளைத் தவிர்த்து யாரால் இயலும்? ஆக மற்றவர்களில் சிலர் தயாளுக்கள் என்றால் இவன் பரமதயாளு என்றபடியாம்.

மேலும் ஒரு குணபராமர்சம் செய்வோம். ஸௌசீல்யத்தை 'குணம்' என்றே அடைமொழியின்றிச் சிறப்பித்துக் கூறுவதுண்டு. அத்தகைய தலையான குணம் பெரியோர்களால் பலவிடங்களில் பகவானிடம் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. உயர்ந்தோன் தாழ்ந்தவனிடம் புரையறப் பரிமாறுவதே ஸௌசீல்யமாகும். ஓர் பெரிய ப்ரபு பிச்சை எடுத்துண்பவர்களுடன் பேதமறப் பேசிச்சிரித்துப் பேசிப்பொழுது போக்குவானாகில் அவனை ஸுசீலன் என்போம். பகவானிடம் காணப்படுவது இவ்வளவேயன்று. அதனால்தான் ஸௌசீல்யத்தின் உயர்ந்தபடியை ஸ்ரீராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் நாம் காண்கின்றோம். ராவணாதி சத்ரு ஸம்ஹாரம் செய்து வெற்றி பெற்று நின்ற பெருமாளை ப்ரஹ்மாதி தேவர்கள் அணுகி ஸேவிக்கப்புக்கார்கள். தேவாதிதேவனும் தன் மேன்மையைச் சிறிதும் பாராதே அவர்களுடன் அளவளாவி நின்றான். இதையே ஒரு மஹாகுணமென்று போற்றலாம். ஆயினும் மேலும் இங்கு ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. பெருமாளைத் துதிக்க விழிந்த ப்ரஹ்மாதிகள் 'நீர் ஸ்ரீமந் நாராயணன்' 'ஸீதை ஸ்ரீமஹாலக்ஷ்மி' என்றாப்போல் சில தத்வார்த்தங்களை உள்ளபடியே வெளியிடப்புக அவர்களுக்கு பெருமாள் அருளிச்செய்த உத்தரந்தான் ஆகா! எத்தகையது? எந்த ப்ரபுதான் தன் உண்மையை அறிந்து வெளியிட்டவர்களிடத்தும் 'தான் ப்ரபு அல்ல' என்று மறுமாற்றம் சொல்லி மேலும் தன்னைத் தாழவிட்டுக் கொள்வான்? 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்' என்றன்றோ பெருமாள் ஸாதிக்கும்படியிருந்தது. இவ்விதம் தேவர்களுக்குப் பதிலுரைக்கும் வகையில் தன்னை மனிதனாகவே கருதி வெளியிட்ட இவ்வதிசயத்தையே ஸௌசீல்யத்தின் எல்லைபாகப் பெரியோர்கள் அநுபவிக்கின்றனர்.

உலகில் ஔதார்யம் என்றும் ஒரு குணம் ப்ரஸித்தமாயுள்ளது. தாரதம்யங்களைக் கவனியாமல் சிறிய உபாயத்திற்குப் பெரிய பலத்தை வழங்கும் வள்ளல்களிடம் இது காணலாகும். இது தம்முடைய ஆச்ரிதர்க்கு தமதனைத்தும் தம்மையும் தந்த பகவானிடம் வெகுவாக விஞ்சியே கிடக்கும். இத்துணையையும் ஆச்ரிதர் கிட்டவிழக்காய் ஆக்கியும் ஆவல் கெடாதே. 'இவர்களுக்கு உசிதமாய்ஒன்றும் செய்தோமில்லையே' என்று 'ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி' என்றபடி கடன்பட்ட நெஞ்சினனாய் ஸர்வேச்வரன் நிற்கும் நிலை கண்ட பெரியோர்கள் இதை ஔதார்யத்தின் பராகாஷ்டை (எல்லை நிலம்) என்றே கூறியுள்ளார்கள்.

இங்ஙனம் பெரியோர் பலவித குணாநுபவம் பண்ணிப்பொழுது போக்கியுள்ளார்கள். 'சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல், சூழ்வினையின் ஆழ்துயரை என்னினைந்து போக்குவர் இப்போது?' ஆக நாமும் அவைகளை, வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும், பூசித்தும், போக்குவோம் [illegible]

19962

ஸ்ரீ:

ஸ்ரீ சடகோபமாமுனிவன் வாழித்திருநாமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(க-ரு) ஸ்ரீதேசிகன் சில்லரை ரஹஸ்யங்களில் அருளிச்செய்திருக்கும் அர்த்த விசேஷங்களின் அருமை பெருமைகளைத் தாம் அநுபவித்து நிரவதிக ப்ரீதியோடே அவைகளை உபதேசிக்கும் ஸ்வாமி வாழியே. ஸ்ரீய:பதியானவன் ஸமஸ்த ஜீவன்களுக்கும் பேரின்பத்தைக் கொடுக்க வேண்டும் என்று பராசர மஹர்ஷி புராண ரத்நத்தின் முடிவில் ப்ரார்த்தித்தது போல ஸர்வப்ராணிகளும் க்ஷேமத்தையடையவேண்டும் என்று விரும்பும் கருணைக்கடலான ஸ்வாமி வாழியே. திருநகரியில் சுனையிலிருந்து நம்மாழ்வாரையெடுத்து ஸ்வாமி ப்ரதிஷ்டை செய்வித்ததற்காக நம்மாழ்வார் திருவுள்ளம் உகந்து தன் திருக்கையிலிருந்த ஹம்ஸமுத்திரையை ஸ்வாமியிடம் கொடுத்து ஸர்வாசார்யத்வத்தையும் நிர்வஹித்து வரும்படி அநுக்ரஹித்தபடியால் இவ்விதம் ஜகதாசார்யத்வத்துக்குச் சின்னமாயும் பரமஹம்ஸாச்ரமத்துக்கு ஒத்ததாயும், விளங்கும் ஹம்ஸமுத்திரை வாழியே. ஸ்ரீய:பதியானவன் ஹம்ஸரூபமெடுத்துக்கொண்டு ப்ரஹ்மாவுக்கு வேதங்களை ஓதினது போல ஸ்ரீ ந்ருஸிம்ஹன் பரமஹம்ஸாச்ரமியான ஸ்வாமியின் திருவுருக்கொண்டு ஜகத்துக்கு ஆசார்யனாய்த் திகழ்கிறார் என்று தெரிவிப்பதற்காக நம்மாழ்வார் ஹம்ஸமுத்திரையை ஸ்வாமிக்கு அருளினார் என்பது ஊஹிக்கத்தக்கது. இதனால் ஸ்வாமியின் ஆசார்யத்வத்திற்கு மங்களம் ப்ரார்த்திக்கப் பட்டதாக ஆகிறது. மற்ற மதத்தினரான ஸந்யாஸிகள் கர்மத்தைச் செய்யாமல் விட்டுவிடுதல் ஸந்யாஸம் என்கிற கொள்கையுடையவர்களாதலால் யஜ்ஞோபவீதத்தையும் தலைக்குடுமியையும் பரித்யஜிப்பதுடன் த்ரிதண்டமும் தரிப்பதில்லை. நம்மிராமானுசன் முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸந்யாஸிகளோவெனில் 'அவரவர்களின் ஆச்ரம தர்மங்களை ஆயுளுள்ளவும் அநுஷ்டித்தே தீரவேண்டும். பரித்யஜிக்கக்கூடாது' என்கிற சாஸ்த்ர விதியை அநுஸரித்து யஜ்ஞோபவீத த்ரிதண்ட சிகைகளோடு திகழ்பவர்களாதலால் இவ்விதம் நம் ஸந்யாஸிகளுக்குள்ள சிறப்பை எடுத்துக்காட்டுவதான ஸ்வாமியின் யஜ்ஞோபவீத த்ரிதண்டசிகைகள் வாழியே. ஸ்ரீவைஷ்ணவத்வத்துக்கு அறிகுறியாக விதிக்கப்பட்ட பஞ்சஸம்ஸ்காராதிகளை ஸ்வாமி பெற்றவராகையாலே ஸ்வாமியின் தோள்களில் திருவாழிதிருச்சங்குகளின் அடையாளங்கள் எப்போதும் விளங்கிக் கொண்டிருப்பதால் இவ்வித ஸ்ரீவைஷ்ணவ சின்னத்துடன் விளங்கும் ஸ்வாமியின் திருத்தோள்கள் வாழியே. ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞையாலே ஸ்வாமி ஸ்ரீந்ருஸிம்ஹனை ப்ரதி க்ராமநகரம் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு 'ஸகல மநுஜநயந விஷயதாம் கத:' என்றுசொல்லும்படி பண்டிதர்கள் பாமரர்கள் யாவரும்ஸகலபலப்ரதனான ஸ்ரீ ந்ருஸிம்ஹனை கண்ணாரக்கண்டு ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி செய்த ஸ்வாமி வாழியே. அகிஞ்சனர்களிடம் க்ருபையினாலே ஸ்ரீதேசிகன் பெரிய ரஹஸ்யத்தில் ஶரணாகதி மார்க்கத்தைக்காட்டி அருளினார். அதனால் ஸ்ரீதேசிகனை 'தஞ்சப்பரகதியைத் தந்தருள்வோன் வாழியே' என்று பாடினார்கள். இவ்விதம் ஸ்ரீதேசிகாவதாரத்தில் எழுத்தறிவுள்ளவர்களுக்கு மட்டில் பயன் தரும்படி சாஸ்த்ர முகத்தாலே உபாயத்தைக் காட்டினது க்ருபாகார்யமே யாகிலும், 'செல்வமுடை வேங்கடவன் அறந்திகழு மாமணியின் அவதாரமாம் குருவே'

என்கிற சடகோபந்தாதிப் பாசுரத்தின்படி ஸ்ரீ தேசிகன் ஆதிவண்சடகோப மாமுனியாய் அவதரித்தபோது ப்ரதி க்ராமநகரம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் என்னும் பரமோபாயத்தை பண்டித பாமரர்களான அகல் ஞாலத்தவர் யாவரும் அறியும்படி காட்டினது பரம க்ருபா கார்யம் என்பது கவனிக்கத்தக்கது. மேலும் ஸ்ரீதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் 'யமநியம விசுத்தை: யந்நபச்யந்தி சித்தை: ச்ருதிஷு சுளகமாத்ரம் த்ருச்யதே யஸ்யபூமா । ஸுலப நிகிலபாவம் மாம்ஸ த்ருஷ்டேர்ஜநஸ்ய ஸ்வயமுபஹரஸி த்வம் பாதுகே தம் புமாம்ஸம்' என்கிற 307-வது ச்லோகத்தில் எந்த பரமபுருஷனை அஷ்டாங்கயோக சுத்தாந்த:கரணர்களான யோகிகளும் பார்க்கமுடியவில்லையோ, வேதங்களினால் எவனுடைய மஹிமாலேசமாத்திரம் காணப்படுகிறதோ, அந்த பரமபுருஷனை யாவரும் மாம்ஸகண்ணாலேயே பார்த்து ஸேவிக்கும்படி வீதிகளில் எழுந்தருளப்பண்ணி விடுகிறாய் என்று ஸ்ரீரங்கநாத பாதுகையின் ப்ரபாவத்தை அருளிச் செய்ததுபோல ஸ்வாமியும் 'தெய்வமல்லாச் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றத்தானாகிய' ஸ்ரீந்ருஸிம்ஹனை யாவரும் கண்டுகளிக்கும்படி செய்தபடியால் ஸ்வாமியை ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய பாதுகாவதாரம் என்றநுஸந்திப்பதும் சாலப்பொருத்தமுடையது, என்பதுமிதனால் அறியத்தக்கது. எந்தக்ரந்தமும் அதில்சொல்லப்படும் அர்த்தங்களை அறியாதவர்களாயும் அதில் சொல்லியபடி நடக்காதவர்களாயும் இருப்பவர்களின் கையிலிருந்தால் பொலிவு இழந்துநிற்கும். அதிலுள்ளவர்த்தங்களை நன்கறிந்து அநுஷ்டிப்பவர்களின் கையில் அது இருந்தால் பொலிவுடனே விளங்கும். ஆதலால் குலிங்கசகுனி வ்ருத்தாந்த வைதேசிகரான ஸ்வாமியின் திருக்கையிலிருப்பதால் மிக்க சோபையுடன் விளங்கும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாராதி க்ரந்தங்கள் வாழியே. இங்கே 'மற்றவனும்தேசிகன் தன்— எத்திசையும் அக்கோசம் ஏந்துகின்ற கையுடனே' என்கிற சடகோபந்தாதிப் பாசுரத்தின் அர்த்தவிசேஷங்கள் அநுஸந்தேயங்கள்.

ஓங்குமலை வாழ்க அஹோபிலந்தான் வாழ்க
பாங்காய் சடகோபன் பா வாழ்க- பூங்கமலந்
தன்னை அணிதாராய் சடகோப மாமுனியே
இன்னம் ஒரு நூற்றாண்டிரும்.

(ப-ரை) ஓங்குமலைவாழ்க— அளவிடற்கரியதாய் ஓங்கி வளர்ந்து இருக்கும் கருடமலை வாழவேண்டும். அஹோபிலந்தான் வாழ்க- அஹோபில க்ஷேத்ரமும் அதிலுள்ள ஸ்ரீந்ருஸிம்ஹ மூர்த்திகளும் வாழவேண்டும். பாங்காய் சடகோபன் பா வாழ்க— இடையூறுகள் யாதுமின்றி திருவாய்மொழி முதலான ப்ரபந்தங்களும் மேற்கூறிய 'செம்பொன் சேர்' என்பது முதலான சடகோபன் வாழித் திருநாமப் பாசுரமும் வாழவேண்டும். பூங்கமலந் தன்னை அணிதாராய்- நளிநாக்ஷமாலை முதலான அழகான பவித்ரமாலைகளை உடையவரான சடகோபமாமுனியே— சடகோப யதீந்த்ர மஹாதேசிகனே! தேவரீர் இன்னம் ஒரு நூற்றாண்டிரும்— ஒரு நூற்றாண்டு முடிந்ததும் மேலும் ஒரு நூற்றாண்டு என்கிற கணக்கிலே காலமுள்ளளவும் எழுந்தருளியிருக்கவேண்டும்.

(க—ரு) 'அநந்தா வை வேதா:' என்கிறபடி அளவுகடந்து நிற்கும் வேதங்களை உருவமாக உடைய கருடனின் திருநாமம் கொண்ட மலையை 'ஓங்குமலை வாழ்க' என்று

வாழ்த்தின் தால் நான் மறையும் தான் வாழவேண்டும் என்றும், அஹோபிலக்ஷேத்ரமென்னும் குறிஞ்சிநிலம் ஒன்றைச்சொல்லி அதன் மூலமாக பாலை நீங்கலாக முல்லை, மருதம் நெய்தல், என்னும் மூன்றுடன் சேர்ந்து நான்கு விதமான நானிலமும்தான் வாழ வேண்டும் என்றும், பாரமைகாந்த்யத்துக்கு சிஹ்நமாய் விளங்கும் துளஸீ நளிநாக்ஷ பவித்ரமாலாதிகளாலே அலங்கரிக்கப்பட்ட திருமேனியை உடைய சடகோப மாமுனிவன் எங்கும் எப்போதுமிருந்துகொண்டு பரமைகாந்தி தர்மமார்க்கத்தைக் காத்து வரவேண்டும்.

(குறிப்பு) இவ்வாழித்திருநாமத்தில் 'பாடியத்தைப்பலகாலும் பகுத்துரைப்போன் வாழியே, என்பது முதலான இடங்களில் 'உரைத்தான் வாழியே, என்று கூறாமல் உரைப்போன் வாழியே.' என்று நிகழ்காலத்தொழில் பெயராக உபயோகிக்கப்பட்டிருப்பதையும் தொண்டருகக்கும் என்கிற பிள்ளையந்தாதிப் பாசுரத்தின்படி இவ்வாழித்திருநாமத்திலும் 'திகழ்திருநூல் திருவேணுத் திருச்சிகையும் வாழியே, என்று திருமேனியை ஸேவிக்கும் வண்ணமே வாழ்த்தியிருப்பதையும் உற்றுநோக்குங்கால் இவ்வாழித்திருநாமமானது இப்போதைக்கு சுமார் 500- வருஷங்களுக்கு முன்னமேயே ஸ்வாமி விபவதசையில் எழுந்தருளியிருக்கும்போதே 2-ம் பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் போன்ற மஹான்களால் பாடியருளப்பட்டது என்பது புலனாகும். இவ்விதம் மஹான்கள் இவ்வாழித்திருநாமத்தைப்பாடி ஸ்வாமி ஸாக்ஷாத்தாகத் திருச்செவி சாத்தி அநுக்ரஹித்ததால்தான் இதில் 'இன்னம் ஒரு நூற்றாண்டிரும்' என்று ப்ரார்த்திக்கப்பட்டபடி ஐந்து நூற்றாண்டுகளுக்குமேலும் இதுகாறும் ஸ்வாமி தன் திருவடிகளான அழகியசிங்கர்களின் பரம்பரையில் அநுப்ரவேசித்தும், கோயில்களில் அர்ச்சாரூபியாயும்' ஆஸ்திகஹ்ருதயாலயங்களில் ஹார்த்தரூபியாயும் எழுந்தருளியிருந்துகொண்டு தர்மமார்க்கத்தை ஸ்தாபித்து வருகிறார் என்பது அறியத்தக்கது.

வாழித்திருநாமத்தின் உரை முற்றிற்று.

ஸ்வாமியின் 'ப்ரபத்யே நிரவத்யாநாம், என்கிற மற்றொரு தனியனும் அதன் உரையும்.

'ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குணஸம்பதாம்।
சரணம் பவபீதாநாம் சடகோபமுநீச்வரம்॥

(குறிப்பு) இத்தனியன் ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயஸ்தர்கள் யாவராலும் அநுஸந்திக்கப்படும் பெருமை வாய்ந்தது.

(ப-ரை) நிரவத்யாநாம்- தோஷமற்றதாயும், தோஷத்தைப்போக்குவதாயுமிருக்கிற குணஸம்பதாம்—ஜ்ஞாநம் முதலான கல்யாணகுணங்கள் என்னும் ஐச்வர்யங்களுங்கு நிஷத்யாம்— கடைபோல் நிறைந்திருக்குமிடமாயும் பவபீதாநாம்— ஸம்ஸாரத்தில் பயமேற்பட்டு மோக்ஷத்தை விரும்புபவர்களுக்கு சரணம்—மோக்ஷோபாயமாயிருப்பவரான சடகோபமுநீச்வரம்-சடகோபயதீந்த்ரரை சடகோபயதிரூபியான இறைவனை ப்ரபத்யே-சரணமாக அடைகிறேன்.

(க-ரு) இத்தனியன் உருவத்தில் சிறியதாக இருப்பினும் அநேக விசேஷார்த்தங்களைக் காட்டுவதாக இருப்பதால் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே இருந்து வருகிறது. 'இதில் சடகோபமுநிம் குரும், என்று சொல்லாமல் சடகோபமுநீச்வரம்

என்று சொல்லியிருப்பதால் இப்பதமானது முநிஷு ஈச்வரம் என்கிற ஸமாஸத்தில் முநிகளில் சிறந்த சடகோபமஹாதேசிகனை, என்ற பொருளையும், முநிம்சாஸௌ ஈச்வரம்ச என்கிற ஸமாஸத்தில் சடகோபயதிரூபமான எம்பெருமானை' என்கிற பொருளையம் தெரிவிக்கிறது. இவ்விரண்டு பொருளுக்கும் ஒத்தவாறு இத்தனியனில் அடைமொழிகளும் அமைந்திருக்கின்றன. ஆகவே தோஷங்கலவாத கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாயும், ஸம்ஸாரிகளுக்கு மோக்ஷமார்க்கத்தை உபதேசித்துக்காப்பவராயும், இருப்பதால் யதிகளில் சிறந்தவராய் விளங்கும் சடகோபமஹாதேசிகனை சரணமடைகிறேன் என்கிற ஒரு விதமான பொருளும், ஆச்ரிதர்களின் தோஷங்களைப் போக்கக்கூடிய ஜ்ஞாநசக்த்யாதி ஷாட்குண்யபூர்ணனும் ,அம்ருதஸ்யைஷ ஸேது:' என்கிற உபநிஷத்தின்படி மோக்ஷம் கொடுப்பவனுமான சடகோபயதிரூபியாயிருக்கும் பகவானை சரணமடைகிறேன் என்கிற மற்றொரு பொருளும் இத்தனியனில் அறியத்தக்கது.

(குறிப்பு) ஸ்ரீய:பதி ஒருவனுக்கே அஸாதாரணமாய் உள்ளதாகத்தீர்மானிக்கப்பட்ட ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநத்வம் என்கிற உபயலிங்கமும் மோக்ஷப்ரதத்வமும் இத்தனியனில் முறையே 'நிரவத்யாநாம்' 'குணஸம்பதாம்' 'நிஷத்யாம், 'பவபீதாநாம் ஶரணம்' என்கிற அடைமொழிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பகவதவதாரமென்பதை இத்தனியன்காட்டுகிறது. பெரும்பாலும் எல்லாருடைய தனியன்களும் அவரவர்களுக்கு ஆசார்யஸம்பந்தத்தால் ஏற்பட்ட ஏற்றத்தைத்தெரிவிப்பதாயிருக்கும்.இப்பொதுவிதியையநுஸரித்து 'கேசவார்யக்ருபாபாத்ரம், என்கிற தனியன் ஸ்வாமிக்கு அமைந்திருக்கிறது. 'ப்ரபத்யே நிரவத்யானும்' என்கிற இச்சிறப்புத்தனியனோவென்றால், மேலேசொன்ன பொதுவிதிப்படி இல்லாமல் ஸ்வாமிக்கு ந்ருஸிம்ஹாம்சாவதாரபாவத்தால் ஏற்பட்ட தனிச்சிறப்பை எடுத்துக்கூறுவதாயிருப்பதும் கவனிக்கத்தக்கது.

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷ்விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், ,,ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா''
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

சோகம் தவிர்த்தவர்

"வைராக்யைகநிதிம் வந்தே வேதாந்தார்ய குருத்தமம் । ஆதிவண்சடகோபாக்யயதீந்த்ரமபி தாத்ருசம்" என்கிறபடி வைராக்ய நிதிகளான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனையும், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் அடிபணிகிறேன்.

மோக்ஷத்தை அடைவதற்கோ, ஸம்ஸாரியாகத்திரிவதற்கோ, மநஸ்ஸு தான் காரணமாகிறது. சப்தாதிவிஷயங்களில் மநஸ் சென்றால் ஸம்ஸாரமும், சப்தாதிவிஷயங்களிலாசையற்றிருந்தால் மோக்ஷமும், கிடைக்கின்றது. ஆசை பரமாத்மாவினிடத்திலிருப்பது நல்லது. அபரமாத்மாவினிடத்தில் ஆசையற்றிருக்கவேணும். அப்படியிருப்பவர்களே பரமைகாந்திகளாவார்கள். 'தோஷாநுசிந்தநார்த்தா ஸ்ம்ருதிரபி தூரீகரோதி வைராக்யம்' [சப்தாதிவிஷயங்களை விடுவதற்காக அவைகளின் தோஷங்களை நினைத்தாலும் விஷயஸ்வபாவமானது வைராக்யத்தைப்போக்கடித்து விடும்.] என்கிறபடியிறே விஷயங்களின் க்ரூரதையிருக்கும்படி. முக்கியமாகப் பெண்ணாசையும் மண்ணாசையுமேவைராக்யத்தையும் பெருஞ் செல்வத்தையும் நாசஞ்செய்யக்கூடியது. இதைக் கம்பர்—

எண்பொருட்டோன்றிநின்றேவருமேண்ணினால்
விண்பொருட் டோன்றிய வுயர்வு மீட்சியும்
பெண்பொருட்டன்றியும் பிறிதுண்டாமேனின்
மண்பொருட்டன்றியும் வரவும் வல்லதோ.

என்று கூறினார்.

[ஸ்ரீவிபீஷணாழ்வான் இராவணனைக் குறித்துச் சொல்லுகிறார்:— (ப்ரபோ லங்கேச்வர!) நன்கு ஆலோசித்துப் பார்த்தோமாயின் ஒருவனுடைய பெருஞ்செல்வம், பெண்ணாசையாலும் மண்ணாசையாலுமே அழிவையடைகின்றது; பிறவகையால் அதற்கு அழிவு நேராது என்று.] பெண்ணாசையால் விச்வாமித்ரப்ரப்ருதியான மஹர்ஷிகள் அநேகமாயிரமாண்டுகள் செய்த தபஸ்ஸின் பலத்தை யிழந்திருக்கிறார்கள். 'பலவாநிந்த்ரியக்ராம: வித்வாம்ஸமபி கர்ஷதி' என்றபடி தபோதனர்களையும் ஐம்புலன்களிழுத்துப் பள்ளத்தில் தள்ளிவிடுகிறது. மண்ணாசையும் பண்டிதர்களையும் விடுகிறதில்லை. அயலார் சொத்தை அபஹரித்தால், இஹலோகத்தில் நிந்தையும் பரலோகத்தில் பீதியும் உண்டென்றறிந்த பண்டிதர்களும் தம்முடைய குடும்பரக்ஷணார்த்தமாக பரத்ரவ்யாபஹாரம் செய்கிறார்களன்றோ! பரமதரித்ரர்கள் தான் பணத்தில் ஆசைப்படுகிறார்களென்பதில்லை. அநேகமாக தனமுடையவர்களுக்கே தனத்திலாசையதிகம். 'லக்ஷேச: க்ஷிதிபாலதாம் க்ஷிதிபதி: யக்ஷேசதாம் வாஞ்சதி । யக்ஷேச: புரீந்த்ரதாம் ஸுரபதி: ப்ரஹ்மாஸ்பதம் வாஞ்சதி ப்ரஹ்மா சைவபதம் சிவோ ஹரிபதம்' என்கிறபடி லக்ஷாதிபதி ராஜ்யாதிபதியாகவும், அவன் யக்ஷேசனாகவும், அவனிந்த்ரனாகவும், ஸுரபதி ப்ரஹ்மாவாகவும், ப்ரஹ்மா சிவனாகவும், சிவன் ஹரியாகவும் ஆசைப்படுகிறார்கள். ஆக ஆசையின் அவதியை தநிகர்களொருவரும் அடைந்தார்களில்லையென்று ஏற்படுகிறது. இவ்விதம் பண்டிதர்களும், பாமரர்களும், பணமுடையவர்களும், செல்வத்தில் ஆசையுடையவர்களாயல்லல் படுவதைக்கண்ணுற்ற நம் ஆழ்வார் நமக்கு அருளிய அரிய உபதேசத்தின் ரஸத்தை அநுபவித்து அதன்படி தாம் அநுஷ்டித்து பிறரையும் அநுஷ்டிக்கச்செய்ய உத்தேசித்து நம் தூப்புல் வள்ளல் அநுக்ரஹித்ததை இங்கு சற்றே யநுபவிப்போம்.

நம்மாழ்வார் தமக்கு உசாத்துணையாக பகதநுபவம் பண்ண வைஷ்ணவர்கள் யாரேனுமுளரோ என்று பார்க்க, எல்லா வைணவரும் அர்த்தபரர்களாய் மனிதர்களைக் கவிபாடிக்கொண்டிருப்பதைப் பார்த்துக் கலங்கி, அவர்களைப்பார்த்து 'சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ' என்றார். அதாவது—மநுஷ்யர்களைப் பாடலாகாதென்று நிஷேத்யதயா உச்சரிப்பது முசிதமன்று. ஆகிலும் சொல்லுவன். அதன்படி அநுஷ்டிக்காவிடினும் அதைக்கேட்கவாவது வேணும் என்று பிரார்த்தித்தார். புலவீர்காள்! கழிய மிக நல்லவான் கவிகொண்டு ஓர் மானிடம்

பாடல்-ஓர் மநுஷ்யஜாதியைப்பாடுகையாலென்
னவது? நச்வரரான மநுஷ்யரைப்பாடி ஸம்
பாதிக்கும் பெரும் பொருள்தான் எத்தனை
நாளைக்குப்போதும்.? மணிமுடி வேங்கடவர்
தாதையைப் பாடினால் அவன் கொள்ளக்
குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோ
திலன். ஆகையால் வள்ளலான மாமணிவண்
ணன் தன்னைக்கவிசொல்வாருங்கோளென்று
மூன்றாம்பத்து 9-ம் திருவாய்மொழியில் 5
பாசுரங்களால் பாடினார். இவ்வரிய உபதே
சத்தைத்தம் திருவுள்ளத்தில் பதியவைத்துக்
கொண்டார் நம் ஸ்வாமி. ஒருஸமயம் விஜய
நகரத்தரசரிடம் மந்த்ரி பதவி வஹித்துவந்த
வித்யாரண்யர் நம் தேசிகோத்தமருக்கு ஒரு
கடிதம் எழுதியனுப்பினார். அதில் எழுதிய
தாவது;—'மஹாக்யாதியையுடைய ஸ்வாமிந்!
அடியேன் மஹாராஜாவினிடம் தேவரீருடைய
கவிதாசாதுர்யத்தையும், வாதத்தில் வெல்லும்
திறமையையும், பற்றிச்சொன்னேன். தேவ
ரீருடைய கீர்த்தியை அறிந்தநாள்முதல் தேவ
ரீரையே த்யாநித்துக்கொண்டிருக்கிறான்.
ஆகையால் சிஷ்யர்களுடன் தேவரீர் இங்கு
எழுந்தருளி தேவரீருடைய திருமுகத்திலி
ருந்து வெளிக்கிளம்பும் இன்சொல்களால் அர
சனையும் அடியேனையும் ஆநந்திக்கும்படிச்செய்
யவேண்டும்'என்று. இதைக் கண்ணுற்ற கவி
ஸிம்ஹம் ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தியை யடி
யொற்றி 'க்ஷோணீகோண' என்னும் வைரா
க்யபஞ்சகத்தின் முதல் ச்லோகத்தை எழுதி
யனுப்பினார். இப்பூமண்டலத்தில் ஏதோ
ஒரு கண்டத்தின் ஒரு மூலையை ஆளும் அர
சர்களை ஸ்தோத்ரம் செய்து அதனால் அடை
யும் தனமானது என்னவது? எத்தனை நாளைக்
காவது? அதை நாம் பொருட்டாக மதியோம்.
ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்தோத்
ரம் செய்ய நிச்சயித்துள்ளோம். ஸ்தவப்ரிய
னை அவன் தன் வீடு தருதுவடன் ஆநுஷங்
கிகமாக இதர போகங்களையும் தரவல்லன்.
இதற்குச்சான்று- முன்பு ஒரு பிடி அவலாலே
கண்ணன் குசேலமுனிக்கு நிறைந்த செல்வத்
தைத் தந்ததேயாகும். ஆகையால் ஸகல பல
ப்ரதனான ஶரண்யனின் அநுக்ரஹமே நமக்
குத் தேவை என்ற பொருள்பட எழுதியிருந்
தாயிற்று. ஆழ்வார் நாம் சொல்வதின்படி
நடக்காவிடினும் 'கேண்மினோ' என்றார். அவ
ருடைய கஷ்டத்தை நிவ்ருத்தி செய்வதற்கா
கவே ஸ்வாமி இவ்விதம் அநுஷ்டித்துக் காட்டி
னார். ஆழ்வார் பாசுரத்தில் சொல்லியவை
களையே ச்லோகமாக வமைத்தார். ஆனால்
ஆழ்வார் 'கொள்ளக்குறைவிலன் வேண்டிற்
றெல்லாம் தரும் வள்ளல்' என்று பொதுவாக
ஸாதித்திருப்பதை நம் ஸ்வாமி குசேலமுனிவ
ருக்குக் குபேர ஸம்பத்தைத் தந்தும் குறை
வில்லாத கோவிந்தனாக இருந்த வ்ருத்தாந்
தத்தை த்ருஷ்டாந்தமாகக் காட்டியருளினார்.

மேலும் அர்த்தபரர்களான சில கவிகள்
'ஸ்வாமிந்! தேஹயாத்ரையை நடத்துவதற்
காக ப்ரபுக்களான மனிதர்களைப் பாடுகின்
றோம். அதனால் என்ன குற்றம்? தேஹயாத்
ரையை எப்படி நடத்துவது?' என்று கேட்ப
தாக வைத்துப் பேசுகிறார் 'வம்மின் புலவீர்
மெய்வருத்திக் கைசெய்துய்மினோ' என்று.
அதாவது— புத்திமான்களே சரீரப்ரயாஸை
பட்டு பயிரிட்டு ஜீவியுங்களென்றார். அதற்கு
'க்ருஷ்யாதிவ்யாபாரங்கள் உழைத்து சரீரச்ர
மப்பட்டுச் செய்யக் கூடியதாகையால் அவை
துஷ்கரமல்லவோ? அதைவிட ஸ்ரீமான்களான
மானிடரைக் கவிபாடுகையே நன்றன்றோ'
என்று கெட்க, உங்களுடைய அபேக்ஷிதத்
தைக் கொடுக்கக்கூடிய மனிதர் இங்கு ஒருவரு
மில்லை. அவைகளைக் கொடுக்கக்கூடிய இந்த்
ராதிகளைக் கவிபாடினாலோவென்றால், அதெல்
லாம் ததந்தர்யாமியான பரமாத்மாவையே
சேருபாதலால் எம்பெருமானையே ஸாக்ஷாத்
தாகத் துதி செய்யுங்கோளென்கிறார் 6-வது
பாட்டில்.

நம் தேசிகோத்தமரை வித்யாரண்யர் ராஜா
வின் ஸதஸ்ஸிற்கு வரும்படி மறுபடியும்
ப்ரார்த்தித்தார். அதற்கு 'ஸிலம் கிமநலம்'
என்று தொடங்கும் ச்லோகங்களை எழுதி
யனுப்பினார். அவைகளும் நம்மாழ்வார் ஸ்ரீ
ஸூக்தியை யடியொற்றினவைகளே. முன்பு
கேட்ட கேள்விகளுக்கு ஸ்வாமி ஸாதிக்கும்
ஸமாதானம் ஸாரதமமானது. ஆழ்வார் க்ரு
ஷ்யாதி வ்யாபார்ங்களைச்செய்யுங்கோள் என்
றார். ஆனால் அது உழைத்துச்செய்யவேண்டி
யதாயிற்றே என்றால் அதற்கு பரம்பரயா பக
வானைத்தான் உங்கள் ஸ்தோத்ரம் போய்ச்
சேரும். ஆகையால் நேரிடையாகவே பக
வானையே துதி செய்யுங்கோள் என்று ஸமா
தானம் கூறினார். ஸ்ரீஆழ்வார் ஸ்ரீஸூக்தி
யையே நன்கு விவரித்துக் காட்டினார் நம் தூப்
புல் குலமணி. உண்ண உணவு, குடிக்கத்தண்

ணீர், உடுக்கக் கந்தை இவை மூன்றுதானே வேண்டும், இவைகளுக்காக மைவருத்து கை செய்துய்ய இசையவேண்டாம். உங்கள்வயிற்றை நிறைப்பதற்கு 'ஸிலம்' என்று சொல்லப்படும்வயல்களில் சிந்திக்கிடக்கும் நெற்கதிர்கள் போதாதா? குளங்களிலுள்ள நீரைப் பருகக் கூடாதா? வீதிகளில் போட்டிருக்கும் கந்தைகள் உடுக்க உடையாகாதா? இவ்வளவு ஸுலபமாகக்கிடைக்கக்கூடியதற்காகவா அரசர்களைப் பாடவேண்டும்! அந்தோ!! ஸாயங்காலத்தில் விகஸித்த மல்லிகை புஷ்பத்தின் வாஸனை வீசுகின்ற என்னுடைய வாக்கினால் அரசர்களை ஒரு த்ருணம் — புல் கூட யாசிக்கமாட்டேன் என்றார். இவ்விதம் நம் ஸ்வாமி நம்மாழ்வார் திருவுள்ளத்தையடியொற்றி ஸாதித்ததானது ஆழ்வாரின் ஆழ்ந்த சோகத்தைத் தவிர்த்ததாகிறது. நாம் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்காவிடினும், கேட்கவாவது கேளுங்கோள் என்று வருத்தமுற்று ஸாதித்ததை அநுஷ்டானத்தில் கொண்டுவந்து ஆழ்வாரின் சோகத்தைத் தவிர்த்தார். தாமும் சோகம் தவிர்ந்தார். நாமும் நம்மாழ்வாரும் நமதாசார்யோத்தமனும் சென்ற வழியே நல்வழி என்று துணிந்து அதன்படி நடந்து வைராக்யத்தால் உண்டாகும் ஸுகத்தை அனுபவிப்போமாக.

ஸ்ரீ:

செய்திகள்

சென்ற புரட்டாசி மீ 21 வ (7-10-55) வெள்ளிக்கிழமையன்று திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீதேசிகர் ஸ்தோத்ர பாடப்போட்டி பரீக்ஷை நடந்தேறியது. அதில் ஆண்களும், பெண்களுமாக பலர் அங்கயித்தார்கள். ஸ்ரீஸ்துதியிலும், கோபால விம்சதியிலும் பரீக்ஷை நடந்தது. ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் முக்கூர். ஸ்ரீ, உப. ராஜகோபாலாசாரியார் ஸ்வாமியும், திருக்கள்ளம் சக்ரவர்த்தி ஸ்ரீ. உப. நரஸிம்ஹ ராகவாசாரியார் ஸ்வாமியும், பரீக்ஷகர்களாக இருந்தார்கள். மேற்குமாம்பலம் ஸ்ரீஅஹோபிலமடம் பாடசாலையிலிருந்து 6 வித்யார்த்திகள் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீ.உப. K. பாஷ்யமய்யங்கார்(அட்வொகேட் சென்னை) அவர்கள் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கு பரிசளித்தார். இம்மாதிரி ஒவ்வொரு வருஷமும் இந்த ஸ்தோத்ர பாடப்போட்டி ஸ்ரீதேசிகன் சாத்துமுறையின்போது நடத்தப்படுமென்றும், பரிசுகள் வழங்கப்படுமென்றும், வாக்களித்திருக்கிறார்கள்.

—: இவ்வருஷம் பரிசு பெற்றவர்களின் விவரம் :—

பரிசு விவரம்	பரிசு பெற்றவர்.
முதல் பரிசு:- 12-8-0 ரூபாய் மதிப்புள்ள பெரியாழ்வார் திருமொழி. (ஸ்ரீ. உப. உத்தமூர் வீரராகவாசாரியர் ஸ்வாமி உரையுடன்)	T.N. கோதண்டபாணி. III Form மேற்குமாம்பலம், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை வித்யார்த்தி.
இரண்டாவது பரிசு:- 4 ரூபாய் மதிப்புள்ள நாச்சியார் திருமொழி (ஷை ஸ்ரமி உரையுடன்)	ஷை. பாடசாலை II Form C. ஸம்பத்.
மூன்றாவது பரிசு:- 3 ரூபாய் மதிப்புள்ள திருப்பாவை (ஷை ஸ்வாமி உரையுடன்)	ஷை பாடசாலை IIForm A. நடராஜன்.

மற்றும் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு ரூபாய் வீதம் பரிசு வழங்கப்பட்டது.

ஐயன் ஸ்ரீநிவாஸாசாரியர்,
தலைமையாசிரியர். ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, மேற்கு மாம்பலம்.

சந்த்ர தர்சன மஹோத்ஸவம்

ஹைதராபாக்கத்தில் ஸ்ரீ. உப. ஸ்ரீமான் ராஜா பகதூர் ஆராவமுதய்யங்கார் M. B. E. ஸ்வாமியை ப்ராயிகமாக எல்லோருந் தெரிந்து கொண்டிருக்கலாம். இவர் ஸ்ரீவைஷ்ணவ சிகாமணி. ஸ்ரீஸநாதநதர்மத்திற்கு ப்ரதிபம் போல் விளங்குகின்றார். இவர் அநேக வருஷங்களாக வக்கீல் தொழிலிலிருந்துவந்தார். ப்ரக்ருதம் இங்கிருக்கும் மினிஸ்டர்கள் முதலான ப்ரமுகர்கள் இவருடைய சிஷ்யர்களே. இவர் மஹாராணியார் இழந்த கத்வால் ஸமஸ்தானத்தை மஹாப்ரயத்னம் செய்து மஹாராணிக்கு அதீனமாகச் செய்துவைத்தார். இவர் சில வருஷங்களுக்குமுன் இந்த ராஜ்யத்தில் லா, மந்த்ரியாகவிருந்தார். அநேகம்பேருக்கு இவர் பணத்தாலும் சரீரத்தாலும் வாக்காலும் உதவி புரிந்திருக்கிறார். இவருக்கு நடந்த ஜய வருஷத்தில் 81 வது வயது தொடங்கியது. இதன் ப்ரயுக்தமாக ஸஹஸ்ர சந்த்ரதர்சன மஹோத்ஸவம் என்பது, யதாசாஸ்த்ரம் ஹோமம் பட்டாபிஷேகம் முதலானவை நடைபெற்றன, அநேக ப்ராஹ்மணர்களுக்கு வஸ்த்ரம், தனம், முதலானதை ஏராளமாகஸமர்ப்பித்தார். அப்பொழுது கத்வால் ஸமஸ்தானத்தில் ஸ்ரீஅஹோபிலமடம்ஸ்ரீ அழகியசிங்கர்கள் நியமனுநுஸாரம் தர்மாதிகாரியாகவும் ஹைதராபாத் ராஜ்யத்தில் ஸ்ரீகார்யமாகவும் நியமிக்கப்பட்ட சிறுக்கூர் வித்வான் வெங்கடராகவாசாரியார் (சிரோமணி) ஸ்ரீமான் அய்யங்காருக்கு கீர்வாணபாஷையில் ஓர் அபிநந்தன பத்ரிகை எழுதி ஸமர்ப்பித்தார். அந்த ஸமயத்தில்ஸமஸ்தான ஸ்ரீகார்யகர்த்தாவாகிய இவருக்குசில நாள்களுக்குமுன் ஸ்ரீகத்வால்மஹாராணியார் எழுத்துமூலமாக கொடுத்திருந்த 'வித்யாவிபூஷணம்' என்கிற பிருதை ஸ்ரீமான்அய்யங்கார் ஸ்வாமி ஸபையில் வாசித்து ப்ரசுரம் செய்து கத்வால் ஸமஸ்தானத்தில் ஸுமார் 15 வருஷ காலமாக இவர் தர்மாதிகாரியாகயிருந்த போது ஸமஸ்தானத்திற்கும் பண்டிதர்களுக்கும் செய்த ஸேவையைப்பற்றி ப்ரசுரம் செய்தார். பிறகு தாம்பூலபலாதிகளுடன் ஸபை முடிவு பெற்றது. இப்படிப்பட்ட மஹானுக்கு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் பூர்ணயுஸ்ஸைக்கொடுத்து ஆரோக்யாதிகளையும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனைப் பிரார்த்திக்கிறோம்.

சிறுக்கூர் மா. வெங்கடராகவாசார்யர்
ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம்,
ஹைதராபாத்.

ஸ்ரீ கல்யாண பிவர்த்திநீஸபா, மதுராந்தகம்

இச்சபையின் பூர்வாங்கமாக விசேஷக் கூட்டம் ஒன்று (20–9–55) செவ்வாய்க்கிழமை மாலை $3\frac{1}{2}$ மணிக்கு இக்கலாசாலையின் ப்ரார்த்தனமண்டபத்தில் ஷை கலாசாலை அத்யக்ஷர் ஸ்ரீ.உப.T.ராமஸ்வாமிஐயங்கார் (M.A.L.T.) ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அவ்வமயம் ஸ்ரீ. உப. அத்யாபகஸ்வாமிகளும், வித்யார்த்திகளும் வந்திருந்தனர். அதுஸமயம் மன்மத வருஷத்திய ஸபையின் கார்யங்களை நடத்துவதற்கு கார்யதரிசிகளைத் தேர்ந்தெடுக்கும்படி அத்யக்ஷஸ்வாமி வித்யார்த்திகளை நியமித்தார். அதன்படியே வித்யார்த்திகளும் ந்யாயசிரோமணி 4 வது 3 வது வகுப்புக்களிலிருக்கும் J. சேஷாத்ரி, V.D. ரங்கராஜன், என்னும் வித்யார்த்திகளை கார்யதர்சிகளாகவும் வ்யாகரணசிரோமணி 4 வது வகுப்பிலிருக்கும் P.V. வரதவேதாந்தம், வ்யாகரணசிரோமணி 3 வது வகுப்பிலிருக்கும் N.V. நிகமாந்தம், V. ராமாநுஜன், என்ற மூவரையும் காரியக்கமிட்டி மெம்பர்களாகவும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுத்தனர். அதன்படியே அத்யாபகஸ்வாமிகள் அங்கீகரிக்க, அத்யக்ஷஸ்வாமி கார்யநிர்வாஹத்தைப்பற்றி கார்யதர்சிகளுக்கு எடுத்துக்கூறினர். பிறகு அக்கூட்டமன்று சுபமாக முடிவுபெற்றது.

(தொடர்ச்சி 314-வது பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

11-10-55 ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஜெயங்கொண்டசோழபுரம் எழுந்தருளினார். அன்று ஏகாதசி. அன்று ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள ஸ்ரீமுஷ்ணமெழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் பூர்ணகும்பம் முதலிய மரியாதைகளுடன் எதிர்கொண்டழைத்து ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளப் பண்ணினார்கள். 13-10-55 ல் அவ்வூர் ஸ்ரீ தட்டை ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியார் முதலானவர்கள் ஆராதித்தார்கள். 14-10-55 ல் ஸ்ரீ வரதாசாரியர் முதலியவர்கள் ததீயாராதனை நடத்திவைத்தார்கள். மற்ற திவ்யதேசங்களில்போல திருவுள்ளமுகந்து பாத்மபுராணத்தில் சொல்லப்பட்ட 8 ஸ்வயம்வ்யக்தக்ஷேத்ரங்களில் 2-வது ஸ்வயம்வ்யக்தக்ஷேத்ரமான இந்த ஸ்ரீமுஷ்ணக்ஷேத்ரத்திலும் ஸ்ரீ பூவராஹனை மங்களாசாஸனம் செய்தருளலாமென்று உள்ளூர் ப்ரமுகர்கள் கோயில் அர்ச்சகர், அதிகாரிகள் முதலானோர் ப்ரார்த்தித்ததின் பேரில் ஸ்ரீ பூவராஹனை 14-10-55ல் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் எல்லா மரியாதைகளும் நடந்தன. அவ்வூரில் எழுந்தருளியிருந்த இரண்டு தினங்களிலும் நித்ய புஷ்கரிணியில் காலை நீராட்டம் கண்டருளி அநுஷ்டானத்தை முடிக்கும்படியாயிருந்தது. அன்று ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 2 மைல் தூரமுள்ள காவனூர் எழுந்தருளினார். ஸ்ரீ மடத்து மாஜி ஏஜண்ட், ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர், மணியம் ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் முதலியவர்கள் அவ்வூரில் 15-10-55 ல் ஆராதித்தார்கள். ஸ்ரீமுஷ்ணத்திலேயே விருத்தாசலம் வக்கீல், ஸ்ரீ ஆர். வீரராகவாசாரியர் ஸ்ரீ ஆர். ஸாரநாதய்யங்கார் முதலியவர்கள் விருத்தாசலமெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்திருந்ததின்பேரில் அன்று ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள விருத்தாசலமெழுந்தருளினார். 16-10-55 ல் அங்கு ஆராதித்து டோலையும் நடத்திவைத்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள கம்மாபுரமெழுந்தருளினார். 17-10-55 ல் அவ்வூர் வாஸிகள் பூர்ணமாக ஆராதித்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள உடையூரெழுந்தருளினார். 18-10-55 ல் ஊரார் யதாசக்தி ஆராதித்தார்கள். 18-10-55ல் ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள சிதம்பரமெனும் திருச்சித்திரகூடமெழுந்தருளினார். ஸ்ரீமுஷ்ணத்திலேயே அவ்வூரார் வந்து ப்ரார்த்தித்திருந்தபடியால் அவர்களது ப்ரார்த்தனைக்கிணங்க அவ்வூரிலேயே 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வர்ஷதிருவாராதனத்தை நடத்துவதாகத் திருவுள்ளம் பற்றியாகியிருந்தது. 19-10-55 ல் வக்கீல், ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்ரீ விஜயராகவாசாரியர், மளிகை, ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள் ஆராதித்தார்கள். சித்திரகூடத்தெம்பெருமானையும் திருவுள்ளமுகப்புடன் மங்களாசாஸனம் செய்யலாமென கோயில்துறையார் முன்னாடியே ஸங்கத்தர்களாய் இருப்பதாக வந்து விஜ்ஞாபித்தபடியால் அதன்பேரில் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் எல்லா மரியாதையும் நடந்தது. பெருமாளுடன் ஸ்ரீ அழகியசிங்கர் சித்திரகூடவீதியார வரவேணுமென்று அவ்வூர்வாஸிகள் ரொம்பவும் ப்ரார்த்தித்ததின்பேரில் பெருமாளுடன் தந்தப்பல்லக்கில் அவ்வூர் வீதிவழியாக விசேஷவாத்யத்துடன் வாணங்களுடனும் எழுந்தருளி படத்தின் பழைய ஏஜண்ட், வக்கீல், ஸ்ரீவேங்கடேச அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். 20-10-55 ல் ஷியார் க்ருஹத்தில் 41—வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வர்ஷாராதனத்தை உத்தேசித்து கஞ்சங்கொல்லையிலுபக்ரமிக்கப்பட்ட திவ்யப்ரபந்த வேத க்ரந்தபாராயணங்கள் சாத்துமுறை நடந்து ஸ்ரீபாததீர்த்தம் நடந்து கோஷ்டியும் நடந்தது. அன்று பெருமாளை ஆராதித்ததுடன் ஸ்ரீ வெங்கடேச அய்

யங்கார் ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதனத்தையும் நடத்திவைத்தார். அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள புதுச்சத்திரத்திற்கெழுந்தருளினர். கடலூர் வக்கீல்கள் அங்கு தேவையான ஸௌகர்யங்களைச் செய்து வைத்திருந்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல தூரமுள்ள கடலூர் புதுப்பாளையம் எழுந்தருளினர். அவ்வூரில் வக்கீல்களும் டாக்டர், ஸ்ரீ ராமய்யங்கார் முதலியவர்களும் 22, 23 தேதிகளில் ஆராதித்துத் திருமஞ்சனம் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். அன்று ராத்திரி 2 மைல் தூரமுள்ள திருப்பாப்புலியூர் எழுந்தருளினர். 24உ அங்கு வக்கீல் ஸ்ரீ பி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர், ஸ்ரீ துரைஸ்வாமி அய்யங்கார் ஆராதித்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 4 மைல் தூரமுள்ள திருவஹீந்திரபுரமெழுந்தருளினர். ஊர் எல்லையிலிருந்து ஊராரெல்லோரும் வாணவேடிக்கைகளுடனும் வேதகோஷத்துடனும் எதிர்கொண்டழைத்து ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் பெருமாளை எழுந்தருளப்பண்ணினர்கள். ஸ்ரீ தேவநாதனையும் ஸ்ரீ தேசிகனையும் பூர்ணமான உகப்புடன் மங்களாஸாஸனஞ் செய்தருளலாமென்று ஊராரும் கோயில்பரிஜனங்களும் முன்னதாகவே ப்ரார்த்தித்துக்கொண்டபடி அன்று ஸ்ரீ தேசிகனின திருநக்ஷத்திரமும் வாய்த்திருந்தபடியால் ஸ்ரீதேசிகன் திருமாளிகையிலிருந்து ஸந்நிதிக்கு எழுந்தருளி பெருமாளையும் ஸ்ரீ தேசிகனையும் மங்களாசாஸனம் செய்து விட்டு, மலையேறி ஸ்ரீ ஹயக்ரீவனையும் மங்களாஸாஸனம் செய்துவிட்டு எழுந்தருளியாயிற்று. யதாக்ரமம் எல்லா மரியாதைகளும் நடந்தன. மாத்யாஹ்னிகஸ்நானத்தை ஸ்ரீ தேசிகன் திருக்கிணற்றில் செய்தருளியாயிற்று. ஸமீபத்தில் திருவஹீந்திரபுரம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் சுமார் 1500 ரூபாய் வரையில் செலவு செய்து ரிபேர் செய்யவாரம்பித்து வேலை பூர்த்தியாகி யிருந்தபடியால் அன்று ராத்திரி மடத்திற்கெழுந்தருளினர். அவ்வூரிலிருந்து 26-10-55 ராத்திரியே புறப்படுவதாயிருந்த போதிலும் ஊராரின் ஏகோபித்த ப்ரார்த்தனையின்படி த்வாதசிவரையில் அங்கு எழுந்தருளியிருக்கத் திருவுள்ளம் பற்றியாயிற்று. அங்கு எழுந்தருளியிருந்த முதல் மூன்று நாளும் முதலாழ்வார்கள் திருநக்ஷத்ரமானபடியால் கோஷ்டிக்கும் எழுந்தருளியாயிற்று. புறப்பாட்டிலும் கோஷ்டியில் எழுந்தருளியாயிற்று. டாக்டர் ஸ்ரீ ராமசந்த்ர அய்யங்காரும் ஸ்ரீ சாரங்கபாணி அய்யங்காரும் ட்ரஸ்டி ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய ஊரிலுள்ள ப்ரமுகர்களும் பெருமாளை ஆராதித்தார்கள். வெள்ளிக்கிழமை ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் ட்ரஸ்டி, வக்கீல் ஸ்ரீ ராமாநுஜாசாரியர், வக்கீல் ஸ்ரீ ராஜகோபாலாசார்யரும் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். பெருமாள் எழுந்தருளியிருந்த 4 நாட்களும் விசேஷ கோலாஹலத்துடன் உள்ளூர் வாஸிகள் பெருமாளை ஸேவித்தார்கள். ஸ்ரீ தேசிகனுடைய உத்ஸவகாலத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்தால் ஸேவார்த்திகள் இன்னும் இருமடங்காக இருந்திருப்பார்கள் என்று ஊரிலுள்ளவர்கள் வார்த்தைகள் இருந்தன. ஸ்ரீ மடத்தின் ரிபேரைக் கவனித்த ஏஜண்ட் ஸ்ரீ கோபாலாசார்யரிடம் கர்ப்பக்ருஹத்தை வீதிக்கு நேராக அமைக்கும்படி நியமித்தாயிற்று. சீக்கிரத்தில் வேலையை முடிக்கும்படியும் ஐப்பசிமீ 16உ (2-11-55) புதன்கிழமை ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை (மூலவர் உத்ஸவர்) ப்ரதிஷ்டை செய்யவேணுமென்றும் நியமித்தாயிற்று. ப்ரதோஷ ஆராதனம் ஆனதும் பெருமாளுடன் ஸ்ரீதேசிகன் திருமாளிகைக்கு எழுந்தருளினர். அவ்விடம் டோலோத்ஸவம் நடந்தது. நிறைய விளக்குகளுடன் கூடிய விசாலமான மண்டபத்தில் எல்லோரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸேவித்தார்கள். திருவஹீந்திரபுரம் எழுந்தருளும்போது ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் முதலில் எழுந்தருளி அவ்விடமிருந்து புறப்படும்போதும் ஸ்ரீ திருமாளிகையிலிருந்தே புறப்படும்படி அமைந்ததைப்பற்றி எல்லோரும் ச்லாகித்தார்கள். அன்றிரவு புறப்பட்டு 15 மைல் தூரத்திலிருக்கும் பண்டுருட்டி அக்ரஹாரத்திலிருக்கும் ஸ்ரீ ஸாரதி அய்யங்கார் க்ரு

ஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. விசேஷமாக பாணங்கள், வாத்யம் முதலியவைகளுடன் வரவேற்று 29, 30, 31 தேதிகளில் ஆராதித்தார். டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். 31உ ராத்திரி 10 மணி ஸுமாருக்குப் புறப்பட்டு 8 மைல் தூரத்திலிருக்கும் வீரப்பெருமாநல்லூருக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் கிராம முன்ஸீப்ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர்யதாசக்தி ஆராதித்தார். 1-11-55 இரவு 9 மணிக்குப்புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ளதும், ஸ்ரீ ஸந்நிதி ஆதீனத்தைச் சேர்ந்ததும், புராணத்தில் பஞ்சக்ருஷ்ணாரண்யக்ஷேத்ரத்தில் ஒன்றான தாயும் திருக்கோவலூருக்குக் கிழக்கில் 12 மைலிலுள்ளதுமான திருவெண்ணைநல்லூர் ஸ்ரீ வைகுண்டவாஸன் என்கிற வைகுந்தநாதன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அந்த ஸந்நிதியில் பெருமாள் ஆராதனம் நடந்தது. ஸ்ரீவைகுண்டவாஸனை ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்தருளினார். முதல் க்ருஷ்ணாரண்யக்ஷேத்ரம் திருக்கோவலூர். இரண்டாவது திருவெண்ணைநல்லூர். கோபுரம், மதிள் முதலானவற்றைக் கடாக்ஷித்துக் கூடிய சீக்கிரம் ஜீர்ணோத்தாரணம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் பற்றியாயிற்று. ஷை தேவஸ்தான ஏஜண்டும் ஸ்ரீ அஹோபிலமடம் கார்யஸ்தருமான ஸ்ரீ கோவிந்தாசாரியர் யதாசக்தி ததீயாராதனை பண்ணிவைத்து ஆராதித்தார். 2-11-55 அன்று ராத்திரி 9 மணிக்குப் புறப்பட்டு 12 மைலில் உள்ள ஆவியூருக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் பூர்ணகும்பம் கொண்டு வரவேற்றார்கள். திருவயிந்தையில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்தபடி கர்ப்பக்ருஹம் கட்டப்பட்டு ஸ்ரீமதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மூலவர் உத்ஸவர் ப்ரதிஷ்டையும் நன்கு நடந்தது. அது ஸம்பந்தமான மரியாதைகளை ஆவியூரில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில ஸமர்ப்பித்தார்கள். அங்கு அவ்வூரார் பூர்ணமாக ஆராதித்தார்கள். யதாசக்தி வ்யாபரித்து ராத்திரி டோலோத்ஸவமும் செய்து வைத்தனர். 3-11-55 அன்று ராத்திரி புறப்பட்டு திருக்கோவலூருக்கு எழுந்தருளியாயிற்று. தாயனார், ஸ்ரீ பிச்சுவய்யங்காரும் ஸ்ரீ ராஜகோபால அய்யங்காரும் தங்கள் ஸொந்தஊரில் ஆராதிக்கவேணுமென்று இருந்தபோதிலும் மார்க்கத்தின் அஸௌகர்யத்தினால் திருக்கோவலூரிலேயே ஆராதிப்பதாக விஜ்ஞாபித்துக் கொண்டபடி ஸ்ரீ அழகியசிங்கரை வேதவாத்ய கோஷங்களுடன் வரவேற்று ஸ்ரீ வானமாமலை மடத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் 'திருக்கோவலூரதனுள் கண்டேனே' என்றபடி இராமல் திருக்கோவலூரதனைக் கண்டேன் என்றும், 'அன்றாயர்குலக்கொடியோடு' என்ற பாசுரத்தில் 'அவுணர்க்கென்றாலு மிரக்கமிலாதவன் உறையுமிடம் கோவலநகராயிற்று' என்று கொண்டாடி 'திருக்கோவலூரதனுள் திருமாலைக் கண்டேன்' என்றும் அநுஸந்தித்துக் கொண்டிருந்தபடி மறுதினம் டபாஞர் ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் முதலியவர்கள் யதாசக்தி ததீயாராதனம் பண்ணிவைத்தார்கள். அவ்வூர் வாஸிகள் எல்லோரும் யதாசக்தி வ்யாபரித்து ராத்திரி டோலோத்ஸவம் செய்து வைத்தார்கள். இரண்டு தினங்களும் ஸ்ரீ அழகியசிங்கர் 'துஞ்சா நீர்வளஞ்சுரக்கும்' பெண்ணையில் நீராடி ஒருவாறு தாபம் தீர்த்துக் கொண்டாயிற்று. 5-11-55 இரவு புறப்பட்டு ஊருக்கு எழுந்தருளின க்ரமமாகத் திரும்பி ஸ்ரீஸந்நிதிவீதிவழியாகமதிள்கோயில்கோபுரம் முதலியவைகளைக் கைதொழுது கோவலாயன் கும்பமாதத்தில் குரைகடலுக்கு எழுந்தருளும் மார்க்கமாக பெண்ணவலத்திற்கெழுந்தருளியாயிற்று. அந்த கிராமத்தார்கள் யதாசக்தி ததீயாராதனை செய்துவைத்து ஆராதித்தார்கள். அன்று மத்யாஹ்ன மங்கள ஹாரத்திக்கெழுந்தருளும் காலத்தில் பெருமாளுடைய விசேஷ நியமனத்தின்பேரில் அவ்விடமிருந்து மத்யாஹ்னம் 3 மணிக்கே புறப்பட்டு திருவெண்ணைநல்லூருக்கெழுந்தருளி வைகுந்தநாதனை 'என்னைக்குமென்னை' என்ற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து வந்தித்து வாயார வாழ்த்தத் திருவுள்ளம் பற்றியாயிற்று. அதற்கேற்ப அங்கு வந்திருந்த ஏமப்பூர்வாஸிகளும் அன்று ராத்திரியே தங்களூருக்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். அதன்படி

3 மணிக்குப் புறப்பட்டு திருவெண்ணைநல்லூருக்கு 5 மணிக்கெழுந்தருளினார். பல்லக்கு களைஸந்நிதிமண்டபத்திலெழுந்தருளப்பண்ணிவிட்டு ஸ்ரீவைகுண்டநாதனிடமிருந்து மாலை, ஸ்ரீசடாரி முதலியவை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து நம்மாழ்வார், கலியன், பாஷ்யகாரர், ஸ்ரீதேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் முதலியவர்களுக்கு அருளப்பாடிட்டு மரியாதையாகி திருப்பல்லாண்டுதுடங்கி திருவாய்மொழியில் 7ம் பத்து 9-வது திருவாய்மொழி 'என்றைக்குமென்னை' என்றதை பெருமாளுக்கு ஸமர்ப்பித்து கோஷ்டியாக அநுஸந்தித்தாயிற்று. 'இன்கவிபாடும் பரமகவிகளால்' என்ற பாசுரம் வந்தவாறே திருக்கோவிலூர் ஸமீபத்திலிருக்கும் இத் திவ்யதேசத்தின் அமைப்பையும் பாசுரத்தின் இறுதியில் 'என் வைகுந்தநாதனே' என்றிருப்பதையும் அநுஸந்தித்து திருக்கோவலூரில் தான் பெறாத பேற்றை இவ்விடத்தில் பெற்றதாகவு முகந்து அநுஸந்தித்தாயிற்று. அந்த அநுபவ பரீவாஹமாக மேல் பாட்டையும் அநுஸந்தித்தாயிற்று. திருவாராதனமும் உபஹாரமும் கண்டருளப்பண்ணி 'உதவிக்கைம்மாறு' 'இங்குமங்கும்' என்ற பாசுரங்களை சாற்றுமறை செய்து ஸந்நிதிக்ரமமாக மற்ற ப்ரபந்தங்களையும் சாற்றுமறை செய்து தீர்த்தம் சடாரி கோஷ்டிவிநியோகமிவைகளை நடத்தியாயிற்று. தொடக்கத்தின்போதும் சாற்றுமறையின்போதும் பெருமாள் விசேஷித்து அநுக்ரஹித்த அருளப்பாடு மாலை பரியட்டங்களை சேஷநியமனமென்று ஸாதித்துக்கொண்டே உகப்புடன் ஸ்வீகரிக்கும்படி இருந்தது. அங்கிருந்து புறப்பட்டு 7 மணி ஸுமாருக்கு எமப்பூருக்கு எழுந்தருளியாயிற்று. ஊராரெல்லோரும் பூர்ணகும்பம் வாத்யம் சத்ரம்முதலியவைகளுடன் வரவேற்று (7-11-55 8-11-55) இரண்டு தினங்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். 8-11-55 ராத்திரி பேரங்கியூர் எழுந்தருளியாயிற்று. அவ்வூரார் விசேஷமாக ஆராதித்தார்கள். திருக்கோவலூர் எமப்பூர் பேரங்கியூர் இவைகளில் கன்னிகைகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து வியாபரித்து டோலோத்ஸவம் செய்துவைத்தார்கள். வெங்கடாத்ரி அகரம் ஸ்ரீ சக்ரவர்த்தியாசாரியர் ஸ்ரீ ராகவாசாரியர் 15 நாளைக்கு முன் திருவஹீந்திரபுரத்தில் ஊருக்கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். அவர்கள் ஏகாதசி துவாதசி எழுந்தருள ப்ரார்த்தித்தன்பேரில் 9-11-55 ராத்திரி பேரங்கியூரிலிருந்து வெங்கடாத்ரி அகரமெழுந்தருளினார். ரொம்பவும் உத்ஸாஹமாக ஆராதித்தார்கள். 11-11-55 ப்ரதோஷ ஆராதனம் ஆனதும் ராத்ரி வெங்கடாத்ரி அகரமிருந்து பெரும்பாக்கம் எழுந்தருளினார். 12-11-55 ஸ்ரீ வராஹசாமி அய்யங்கார், மணியம், முதலியவர்கள் பொதுவிலாராதித்தார்கள். சனிக்கிழமை ராத்திரி பிம்மாலைநாலுமணிக்கு நரகசதுர்தசியை யுத்தேசித்து (தீபாவளி) ஆராதனம் நடந்தது. அன்று ஸ்வாதியாகையால் பெரியபெருமாளுக்கும், கண்ணனுக்கும் புண்யமான நரகசதுர்தசி ஸ்நாநகாலத்தில் எண்ணைக்காப்பு திருமஞ்சனம் விசேஷமாக நடந்து கோஷ்டிக்கு எண்ணை விநியோகம் நடந்தது. காலை 6 மணிக்குள் நரகசதுர்தசி ஆராதனம் முடிந்தபிறகு 6-30 மணிக்கு வழக்கப்படி விச்வரூபம் அபிகமனம் நடந்தது. அன்று ததியாராதனம் கோஷ்டிக்கு எண்ணை விநியோகமும் ஸ்ரீ வராகஸாமி அய்யங்கார் பண்ணிவைத்தார். மறுநாள் திங்கட்கிழமை ஊரார் ஆராதித்தார்கள். ஊரில் கீழக்கோடியிலிருக்கும் தேசிகன் ஸந்நிதிக்கு பெருமாள் எழுந்தருளவேணுமென்று ஷை தேசிகன் ஸந்நிதியைச்சேர்ந்த ஸ்ரீ ஸௌந்தரராஜஅய்யங்கார் முதலியவர்கள் ப்ரார்த்தனையின்பேரில் அன்று ராத்திரி பெருமாள் எழுந்தருளினார். 15-11-55 ல் செவ்வாய்க்கிழமை அவர்கள் தேசிகன் ஸந்நிதியில் கட்டணம் கட்டி ஆராதித்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு கப்பூர் எழுந்தருளினார்.

(தொடரும்)

திருத்தம்:— புரட்டாசி மாத ஸஞ்சிகையில் 261-வது பக்கத்தில் ஆதனூரில் ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தியும் என்ற இடத்தை திருவாரூரில் ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தியும் என்று வாசிக்கவேணும்.



ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஸூ தக்ஷிணாயனம் சரத் ருது - வ்ருச்சிக மீ 1955 நவம்பர் - டிஸம்பர்]

19-11-55	கார்த்திகைமீ 3வ	சனிக்கிழமை	பூராடம்; 43-வது பட்டம் **ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திரு** நக்ஷத்ரம்.
20-11-55	4வ	ஞாயிற்றுக்கிழமை	உத்திராடம்; 34-வது பட்டம் ஸ்ரீசடகோப ராமாநுஜயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25-11-55	9வ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
26-11-55	10வ	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; கைசிக உத்தாந ஏகாதசி.
29-11-55	13வ	செவ்வாய்க்கிழமை	கிருத்திகை; திருமங்கைமன்னன், நம்பிள்ளை திருநக்ஷத்ரம்; சந்த்ரக்ரஹணம்; பாசஞ்ராத்ர(திருக்கார்த்திகை) தீபம்.
30-11-55	14வ	புதன்கிழமை	ப்ரதமைதிதி; ரோஹிணீ; திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்.
2-12-55	16வ	வெள்ளிக்கிழமை	த்ருதீயை திதி.
3-12-55	17வ	சனிக்கிழமை	சதுர்த்தி - பஞ்சமி திதித்வயம்.
9-12-55	23வ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
10-12-55	24வ	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
13-12-55	27வ	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை.
14-12-55	28வ	புதன்கிழமை	வ்ருச்சிக சுக்ல ப்ரதமை திதி; ஸூர்யக்ரஹணம்.
15-12-55	29வ	வியாழக்கிழமை	அதிதி.

[தக்ஷிணாயனம் ஹேமந்த ருது - சாபமீ]

16-12-55	1வ மார்கழி மீ	வெள்ளிக்கிழமை	சாபரவி 3-6; ஷடசீதி; ஸங்க்ரமணதர்ப்பணம், சாபசுக்லத்விதீயைதிதி; திருப்பள்ளியெழுச்சி.
21-12-55	6வ	புதன்கிழமை	பூரட்டாதி; 41-வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25-12-55	10வ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி. (வைகுண்ட ஏகாதசி)
27-12-55	12வ	செவ்வாய்க்கிழமை	த்ரயோதசி - சதுர்தசி திதித்வயம்.
28-12-55	13வ	புதன்கிழமை	○ பூர்ணிமை திதி.

[குறிப்பு:— 1. கார்த்திகை மீ 13வ சந்த்ர க்ரஹணமானதால் அன்று செய்ய வேண்டிய பர்வதிதி ச்ராத்தத்தை மறுநாள் 14வ செய்யவேண்டியது.

2. கார்த்திகை மீ 28வ ஸூர்ய க்ரஹணம் விட்டவுடன் விமோசன ஸ்நானம் செய்து ப்ரதமை திதி ச்ராத்தத்தைச் செய்யவேணும்.]

Regd. No. M. 4437.

தி ஏஷ்யன் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,

H. O. பம்பாய். ஸ்தாபிதம் 1910.

ஆஸ்திகள் சுமார் ரூ. $4\frac{1}{2}$ கோடி

கிளெம்கள் கொடுத்தது சுமார் ரூ. $2\frac{1}{2}$ கோடி

1954 ம் வருஷத்துடன் முடிவான 3 வருஷங்களுக்கு
ரூபாய் 1000 க்கு வருஷம் ஒன்றுக்கு
வழங்கப்பட்ட போனஸ் தொகை

எண்டௌமெண்ட்	ரூபாய் 8.
ஆயுள் பாலிஸி	ரூபாய் 10.

கம்பெனி வெகு துரிதமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். விவரங்களுக்கு அணுகவும்.

எஸ். ஆர். எஸ். அய்யங்கார்,
பிராஞ்சு மானேஜர்,
252. குட்ஷெட் தெரு,
P. B. 131. மதுரை.

P. U. Patel, B. A. B. Cam (Lord)
ஜெனரல் மானேஜர்,
பம்பாய்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.